"வள்ளுவர் சமயம்"

ஆய்வரங்கு

மதுரைப் பல்கலைக் கழகம்

திருக்குறள் ஆய்வகம்

31-3-1976

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் கருத்து :

இன்று நமது நாட்டில் நிலவும் சமயங்கள் இந்திய மண்ணில் தோன்றி நிலவுவனவும் வேற்று நாடுகளில் பிறந்து இங்கே புகுந்து நிலவுவனவும் என இருதிறத்தனவாகும். அவற்றுள், இசுலாம், கிறித்துவம் என்ற இரண்டும் பிற்கூறிய திறத்தன ; ஏனைச் சைவம், வைணவம், வைதிகம், பவுத்தம், சயினம் முதலியன முற்கூறிய திறத்தன. இவற்றைப் பொதுப்பட நோக்குவோமாயின், உலகிற்கும், உலகிடை வாழும் உயிர்கட்கும் வேறாய் ஒரு பரம்பொருள் உண்டு என்பது எல்லாவற்றிற்கும் ஒப்ப முடிந்த உண்மையாகத் தோன்றும். உயிர்கட்கு மறுபிறப்பும் வினையும் உண்டென்பதை இசுலாம், கிறித்துவம் என்ற இரண்டும் உடன்படுவதில்லை. இந்திய சமயங்கள் அனைத்தும் இவ்விரண்டையும் இன்றியமையாச் சமய வுண்மையாகக் கொண்டுள்ளன. இருக்கு முதலிய வேதநூல்களில் வினையுணர்வு நன்கு வெளிப்படாது நிற்பினும், அந்நூல்களை மேற்கொண்டு எழுந்து விரிந்த பிற்றை நூல்களில் அவைகள் பெரிதும் இடம் பெற்றுள்ளன. வேதநூல் ஆராய்ச்சியாளர் சிலர், வினையுணர்வு வேதகால மக்கட்கு இல்லை; அவர்கள் இந்த நாட்டுட் புகுந்தபின் இங்கே வாழ்ந்த மக்களிடையே இருந்த இக்கொள்கையைத் தாமும் மேற்கொண்டனர் என்று உரைக்கின்றார்கள்.

தமிழகத்தின் முந்து நூல்கள் எல்லாவற்றிலும் வினையுணர்வும் மறுபிறப்புக் கொள்கையும் நிலைபெற்றுள்ளன. அவை எக்காலத்தில் யாவரால் காணப்பட்டன என்பது வரலாறு காணாத ஒன்று. திருவள்ளுவர் இவ்விரு கொள்கைகளையும் உடன்பட்டு ஏற்ற இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

வினையென்பது மனத்தால் நினைப்பதும் வாயாற் பேசுவதும் உடம்பால் செயல் புரிவதும் ஆகிய யாவற்றையும் குறிக்கும். சமய நூல்கள் மனம், மொழி, மெய் என்ற மூன்றின் அசைவும், அசைவின்மையும் வினை என்று கூறும். எனவே மக்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையும் வினையாம் என்று அறியலாம். வினைகளில் நன்மை விளைப்பவை நல்வினை என்றும், தீமை விளைவிப்பவை தீவினை என்றும் கூறப்படும். இவ்விரண்டாலும் முறையே உண்டாகும் இன்பமும் துன்பமும் வினைப்பயன் எனப்படும்.

ஒருவினை தொடங்கும் போதே செயப்படு பொருளும் பயனும் உடன் தோன்றி, முடியுங்கால் அவ்விரண்டும் உருவாகும். செயப்படு பொருளோடு பயனும் உடன் தோன்றுமாயினும், அப்பயனது நுகர்ச்சி காலம் தாழ்த்தும் தாழாமலும் நிகழும். வினையால் உருப்பட்டு நுகரப்படாது நிற்கும் பயன் ஊழ்வினை என்றும் ஊழ் என்றும் வழங்கும். திருவள்ளுவனார், நன்மை பயக்கும் நல்வினையையும், தீமை விளைவிக்கும் தீவினையையும், முறையே ஆகூழ் என்றும் போகூழ் என்றும் வினைப்பயனாய் நுகர நிற்கும் வினைக்கூற்றை ஊழ்வினை என்றும் தனித்தனி நிறுத்தி விளக்குகின்றார். நலம் பயக்கும் நல்வினை யாவும் அறவினை என்றும், அறம் என்றும் அதுவே செய்தற்குரியது என்ற கருத்துத் தோன்றச் "செயற்பாலது ஒரும் அறனே" என்பதனால் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

தீவினையால் விளைவது தீமை; அதன் பயன் துன்பம். வினைப்பயன் அவ்வினையைச் செய்தார்க்கே உரியது; அதனை அவர் ஒரு காலும் நுகராமல் கழிக்க முடியாது. "தீவினைப் பகையுற்றாரும் உய்வர் வினைப்பகை, வீயாது பின் சென்று அடும்" என்றும், நுகர்ந்து கழியுமளவும் அஃது அவர் நிழல்போல் நிற்கும் என்பார், "தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை, வீயாது அடியுறைந் தற்று" என்றும் உரைக்கின்றார்.

வினையால் உண்டாகும் செயப்படுபொருள் பொறிபுலன்கட்குப் புலப்படுவது போல, அவ்வினைப் பயனான இன்பமும் துன்பமும் வினையைச் செய்பவனுக்குப் புலனாவதில்லை. அதனால், அவன் தானேசென்று வினைப்பயனை எடுத்துக் கொள்ள முடியாது; வினைப்பயனோ, உயிர்போல அறிவுடையதன்று; அதனால் அதுதானே வினை செய்தவனை அடையமாட்டாது. ஆதலால் வினை முதல் வினைப்பயனை நுகர்தற்குப் பிறிதொன்று இடைநின்று அதனைக் கூட்டல்

வேண்டும். பிறிதொன்று என்ற அதுதான், உயிர்க்கும் உயிரில் பொருட்கும் வேறாய் இரண்டையும் கூட்டி வாழ்விக்கும் பரம்பொருள்; அது பற்றியே அதனைத் தொல்காப்பியர் "பால் வரை தெய்வம்" என்று குறிக்கின்றார்.

வினையைப் பற்றிக் கூறுமிடத்து, வினை "வீயாது பின்சென்று அடும்" என்றும், "மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்றும், "அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" என்றும் கூறுவனவற்றைக் காணும் போது, வினை தானே நன்மையும் தீமையும் செய்யும் போலும் என்ற எண்ணம் தோன்றும். அவ்வாறே சில சமயத்தவரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையை நோக்கின் உணர்வில்லாத ஒன்றாகிய வினை, ஒருவன் செய்யத் தோன்றலும், செ செய்தானொடு கூட்டக் கூடலும் உடையது என்பது தெளிய விளங்கும். வினை விடாது தொடரும் என்றும் வினைவந்து சேரும் என்றும் கூறுவது, எழுத எழுதும் பேனாவை எழுதுகிறது என்றும், செலுத்தச் செல்லும் வண்டியைச் 'செல்லுகிறது என்றும் வழக்கில் உரைப்பது போலவாம். "இருள் சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்ற விடத்து இருவினையும் சேரா என்பதற்கு இருவினைப் பயனும் சேர்க்கப்படா என்று பொருள்.

வினைகள், மனம் மொழி மெய்களால் பிறப்பன என்று முன்பே கண்டோம். மன முதலிய மூன்றும் சேர்ந்தது உடம்பு. ஆகவே உடம்பு உள்ளவும் வினை பிறந்து கொண்டேயிரு வினை பெருகப் பெருகப் பயனும் பெருகி இருந்து கொண்டே இருக்கும்.

வினைப்பயனையும் வினை வழியாகவே நுகர்கின்றோம்; வினை செய்தற்கும் உடம்பே கருவி; ஆயினும், வினையை இடையறாது செய்வதால் உடம்பும் மூத்து முதிர்ந்து ஓய்ந்து மாய்ந்து போகிறது. அப்போது நுகர வேண்டிய பயன் நுகரப்படாது எஞ்சி விடுகிறது. அதனையும் நுகர்ந்தே கழிக்க வேண்டியிருப்பதால், அது தீர்தற் பொருட்டு வினை செய்தற் புத்துடம்பு வேண்டப்படுகிறது. அதனால் மறு பிறப்புக் கொள்கை எழுவதாயிற்று. ஆகவே வினை காரணமாகப் பிறப்பதும் பிறப்பு வாயிலாக வினை செய்வதும் மாறிமாறி நிகழ்கின்றன வாம். இதனை நன்கு எண்ணுமிடத்து, பிறப்பில்லையாமாறு செய்வதுதான் வினையினின்று விடுதலை பெறும் வழி என்று அறியலாம். அது பற்றியே திருவள்ளுவர் "மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல், உற்றார்க்கு உடம்பும் மிகை" என்று உரைக்கின்றார்.

இப்பிறப்புக்கள் எழுவகைப்படும் என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்; "எழுபிறப்பும் தீயவை தீண்டா" என்றும், "எழுமையும் ஏமாப்புடைத்து" என்றும், "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்" என்றும் வரும் திருக்குறள்கள் இதற்குச் சான்றாகும்.

இங்கே காட்டிய எழுபிறப்பும் பிறந்து வினை செய்து பயன் நுகர்வதால் உயிர் எய்தும் பயன் யாது? வினை செய்தற்கண் உடம்பும் உள்ளமும் ஒன்றிநின்று அவ்வினையை முடிக்குங்கால், உயிர்க்கு உவட்டாத இன்பம் உண்டாகிறது. தன் காதலியின் இனிமைப்பண்பை எடுத்து உரைக்கும் தலைமகன் "உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்" என்று கூறுவதை நற்றிணையில் காணலாம். இதனால், உள்ளிய வினை முடிவில் இன்பம் பயக்குமென்பது தெரிகிறதன்றோ? இவ்வாறே திருவள்ளுவர், வினை இன்பம் பயக்கும் என்பாராய், "துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினை" என்று கூறுகின்றார். பரிமேலழகர் இதற்குத் "துன்பம் உறவரினும், இன்பம் பயக்கும் வினை துணிவாற்றிச் செய்க" எனப் பொருள் கூறுகின்றார். அவ்வாறின்றி, "துன்பம் உறவரினும் துணிவாற்றிச் செய்க, வினை இன்பம் பயக்கும்" என இயைத்துரைப்பது நேரிது.

வினை இன்பமேயன்றி அறிவு விளக்கமும் நல்குவது. பொருள் கருவி காலம் வினை இடம் ஆகிய ஐந்து கூறுகளையும் நன்கு ஆய்ந்து செய்யுமிடத்து புதிய புதிய உணர்வுகளும் செயல்முறைகளும் தோன்றிச் செய்வோனது அறிவுக்கு விளக்கமும் ஆக்கமும் பயக்கும். "வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்" என்பது திருக்குறள். உலகியலில் ஒருவன் பல்லாண்டு வாழ்ந்து பெற்ற அறிவு, நல்ல கல்வி கற்றிருக்கும் இளையோன் ஒருவனது அறிவினும் விளக்கம் மிக்கிருப்பது நாம் பெரிதும் காண நிற்கிறது. இதனால் உலகவாழ்வே ஒருவனது அறிவு விளக்கம் எய்தத் துணையாவது என்றும் உயிர் மக்களுடம்பொடு கூடிப் பிறந்து வினை செய்து பயன் நுகர்வது அறிவு விளக்கம் பெறுதற்கே என்றும் தெளியலாம்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் தொடக்கத்தில் அறியாமை யிருள் சூழ்ந்து இருக்கின்றனர். அதனால் அவருடைய கண் முதலிய புறக்கருவிகளும் அகக் கருவியாகிய மனமும், உலக வாழ்வில், காண்பன கண்டு, செய்வன செய்து, நினைவன நினைத்து, அறிவு விளக்கம் செய்கின்றன. இவை யாவும் வினையாகும். இருள் நீக்கம் காரணமாக வினை நிகழ்வதால், திருவள்ளுவர், "இருள் சேர் இருவினை" என வினைகளைக் குறிக்கின்றார். வினை வழியாக அறிவு இருள் நீக்கம் பெறுகிறது எனினும், விளக்கேந்திச் செல்பவர்க்கு முன்னும் பின்னும் இருளே தோன்றுவது போல அறியாமை தோன்றுகிறது. "அறிதோறு அறியாமை கண்டற்று" என்று குறள் கூறுகிறது.

பிறந்தும் வினைசெய்தும் வாழ்ந்து இயலும் உயிர்க்கும், வாழ்தற்கு இடமளிக்கும் உடம்பு உலகுகட்கும் வேறாகவும் ஒன்றாகவும் உடனாகவும் நிற்கும் பரம்பொருளை உணர்வது அறிவின் கடமை என்று வற்புறுத்துகிறது திருக்குறள். அப்பரம்பொருளைத் திருவள்ளுவர் செம்பொருள் என்றும், அஃது உயிர் உலகு என்ற இரண்டினும் சிறப்புடையது என்றும், காட்டுதற்குச் "சிறப்பு என்னும் செம்பொருள்" என்றும் உரைக்கின்றார். அதனை உணர்ந்த வழி, இது காறும் அறிவை மறைத்திருந்த இருள் நீங்கும் எனவும், என்றும் குன்றாத இன்பம் எய்தும் எனவும் செம்பொருள் உணர்வின் பயன் கூறப்படும். இருள் நீங்கியவழிப் பிறப்பு வேண்டாமையால் "பிறப்பென்னும் பேதைமை நீங்கும்" என்கின்றார்.

உடம்பொடு கூடி உலகில் இருந்தே செம்பொருளை உணரவேண்டும். இருக்கும் போதே வினைசெய்தே தீரவேண்டும். வினையால் மேன்மேலும் பிறப்பு எய்துமன்றோ என ஓர் ஐயம், இங்கே எழுகிறது. உடம்பையும் உலகையும் சார்பாகக் கொண்டு வாழும் உயிர் செப்பொருளை உணர்ந்த வழி அதுவே உண்மைச் சார்பு என உணரும்; அவ்வுணர்வால் அதனைச் சார்ந்து தோன்றும் வினைச்சார்புக்கு இடமில்லாதொழியும்; செம்பொருள் உணர்வால் உயிர் அதனைச் சாருங்கால், வினைச்சார்பு உயிரைப் பற்றுதற்கு ஆகாமையின் பற்றுக்கோடின்றிக் கெடும். இக்கருத்தைச் "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்" என்கின்றார் வள்ளுவர்.

வினைதோன்றுதற்கு உடம்பு உலகுகளின் மேல் உண்டாகும் பற்றே காரணம்; அப்பற்றை விடுவதுதான் செம்பொருளைச் சார்தற்கு வழி. பல்வேறு பற்றுக்களிடையே வாழும் உயிர், ஒன்றைப் பற்றுவதும் ஒன்றை விடுவதுமாக இருக்கும். விடும்போதும், ஒன்றைப் பற்றியல்லது உள்ள பற்றைவிடுவது உயிர்க்கு இயல்பன்று; அதனை நன்குகண்ட வள்ளுவர், "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்றும் "அப்பற்றைப் பற்றுக (ஏனைய) பற்றுவிடற்கு" என்றும் ஓர் அரிய நெறியும் கூறுகின்றார்.

இனி, அச்செம்பொருளின் இயல்பைக் கடவுள் வாழ்த்து என்ற பகுதியில் விளங்க உரைக்கின்றார். செம்பொருளை ஆதிபகவன் என்றும், அவன் உலகமெல்லாவற்றிற்கும் முதற்பொருள் என்றும் குறிப்பதற்கு "ஆதிபகவன் முதற்றே உலகு" என்றும் எடுத்துரைக்கின்றார். செம்பொருள் உயர்திணையா அஃறிணையா என ஆராய்ந்து இன்னதிணை என வரையறுத்துக் கூறலாகாதது. எனினும், உலகுயிர்களில் உயர்ந்து நிற்பது மக்களுயிராதலால், மக்களில்

ஆண் பெண் என இருகூறு உண்டெனினும், உலகில் இதுகாறும் தோன்றிய சான்றோர் அனைவரும் ஆண்மக்கட்கே முதலிடம் தந்து பேசுவது மரபு. அதுபற்றியே செம்பொருளை ஆண்பால் ஒருமையில் வைத்து உரைப்பது இயற்கையாயிற்று. அதனால் செம்பொருளாகிய முதற்பொருளை ஆதிபகவன் என ஆண்பாலில் வைத்து உரைக்கின்றார். அவன் அறிவே உருவானவன் என்றற்கு "வாலறிவன்" என்றும், அவனது அறிவுருவம் மனத்தின்கண் நிகழும் சிந்தனையொளியில் தோன்றுவது என்றற்கு "மலர்மிசை ஏகினான்" என்றும் அவன் எப்பொருளிடத்தும் பற்றில்லாதவன் என்று காட்டற்கு "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்றும், அவன் எங்கும் எப்பொருளிலும் தங்கி முறைசெய்பவன் என்றற்கு "இறைவன் " என்றும் ஐம்பொறிகள் வாயிலாக எழும் அவாக்கள் இல்லாதவன்; ஒப்புவமை கூறற்கு இல்லாதவன்; அளப் பரிய கடல்போன்ற அறங்கள் அனைத்தையும் தன்வடிவாக உடையவன் என்றற்கு அறவாழி அந்தணன்" என்றும் கூறினார்.

இங்ஙனம் உலகைப் படைத்தளித்து உடம்பொடு கூட்டி உயிர்கள் வினை செய்து வாழுமாறு அறிவு விளக்கம் பெற்றுச் செம்பொருட் சார்பு பற்றிப் பிறவாப் பேறும், அழியா இன்பமும் பெறுமாறு உதவிபுரியும் அவனது நன்றியை "மறப்பது நன்றன்று" "செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்தியில்லை," மேலும், மக்கள் ஒருவர்க்கொருவர் செய்யும் நன்றிக்கே வானமும் வையகமுமாகிய உலக முழுதுமே ஆற்றாதாகலின், செம்பொருள் முதல்வன் செய்த நன்றிக்கு நாம் பெற்ற உடல் பயனற்றதாம் என்பார் எண்குணத்தான் தாளை வணங்காத் தலை முதலியன குணமில என்று தெருட்டுகின்றார்.

இவ்வகையே நோக்கின், உலகிலுள்ள மக்கள் அனைவருமே பிறவாப் பெருநிலைக்கு உரியர் என்பது தோன்றும். திருவள்ளுவர் மக்கள் அனைவருமே பிறவிப் பெருங்கடல் நீந்துதற் குரியர்; ஆனால் அவருள் இறைவன் அடிசேராதார் பிறவிப் பெருங்கடலை நீந்தார். அடி சேரும் செவ்வி எய்துங்காறும் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உழல்வர் என்று அறிவிக்கின்றார். இறைவன் என ஆண்பாலால் கூறினமையால், அவன் சார்பை அடியென்றும் தாள் என்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார். இத்துணையும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் வினையுணர்வும் மறுபிறப்பும் செம்பொருள் உண்டென்னும் கொள்கையும், வினைநீக்கத்தால் பிறவாப்பேறு பெறுவதே செயற்பாலது என்பதும், அதற்கு அச்செம்பொருள் செய்துள்ள நன்றியை நினைந்து வழிபடுவதும் பிறவும் வள்ளுவர் காட்டுஞ் சமயக் கருத்தாவது காணலாம்.

<u>ஆ. சக்கரவர்த்தி நயினார் அவர்கள் கருத்து:</u> <u>குறள் காட்டும் கடவுள்</u>

குறள் காட்டும் அன்பு-அறக்கடவுள் ஆகும். பகைவர் நாடு நகரங்களைத் தீயாலும், அக்கினியாஸ்திரங்களாலும், அழிக்கும் கடவுள் அல்ல; குறளாசிரியர் காட்டும் கடவுளின் கையில் போர்த்தளவாடங்கள் இரா. பகைமை, கோபம் விருப்பு - வெறுப்பு அற்றவரே குறள் காட்டும் கடவுள். அக்கடவுளுக்குப் பகைவரும் இல்லை; நண்பரும் இல்லை. அன்பே அக்கடவுளின் ஆயுதம்.

-திருக்குறளும் சமதர்மமும், ப. 20-21.

சமயங்களுள் வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தன சில. தத்துவ சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன சில. இவற்றுள் பின்னதே சிறப்புடையது. ஆதலின் திருவள்ளுவர் சமயநிலையை ஆராயப் புகுவாரும் நூலில் கூறப்பெற்ற வரலாறுகளைத் துணைக்கொண்டு முடிவு கட்டுவது, பனிக்கட்டி கொண்டு வெயிலுக்கு வீடு அமைப்பதே போலும். தத்துவ சாத்திரங்களைக் கொண்டு ஆராய்வதே பல்லவர் அமைத்த மலைக் கோவில்களைப் போல உறுதியானது. ஆதலால் வள்ளுவர் நூலால் அறியத்தகும் சமயக்கருத்துக்களாவன -

உயிர்கள் தாம் தாம் செய்த வினையாலேயே இன்பத் துன்பங்களை எய்துகின்றன; மறுபிறப்பை அடைகின்றன; சுவர்க்கம் நரகம் இவைகளில் தோய்கின்றன. தோற்றம் உடையன யாவும் அழியும் தன்மையன. உடம்பு என்பது, உயிர்கள் தாம் தாம் செய்த வினைகளை உண்டு கழிப்பதற்காக உதவப் பெற்ற கருவி. பிறவி, எல்லையின்றி இடையறாது வருதலின் கடல்போல்வது, மேல் வினைக்கு வித்துமாய் வீட்டின்பத்திற்குத் தடையுமாய் இருப்பன, அகப்பற்றும் புறப்பற்றுமே, உண்மை ஞானத்தாலன்றி உயிர் வீடு அடைய முடியாது. பாசப சுஞானங்கள், உண்மை ஞானத்திற்குத் தடையாயிருத்தலும் உண்டு. அறியப்படுகின்ற பொருள்களில் எல்லாம் வியாபித்து நிற்கும் உண்மையை அறிவதும், பெரியோர் கூறும் உபதேச மொழிகளைக் கேட்பதும், சிந்திப்பதும் ஆகிய மூன்றுமே உண்மை ஞானத்திற்கு உற்ற வாயில்கள். அவ் உண்மை ஞானத்தை உற்றார், செம்பொருளைக் காண்பர். செம்பொருளைச் சார்ந்தாரை ஆகாமிய சஞ்சித வினைகள் சாரா, பிராரத்த வினை உண்டாலன்றிக் கழியாது. பிறப்பு வீடுகளின் துன்ப இன்பங்களை அறிதலும், பொறியடக்கமுமே மெய்ஞ்ஞானவாயிலின் முதற்படி. சுவை முதலிய தன் மாத்திரைகளையும் அறிந்து அவைகளின் காரணங்களையும் உணர்தலே உலகினை அறிதல். மெய்ப்பொருளை அறிதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது என்பன.

செம்பொருளாகிய கடவுளையும், கடவுள் தன்மையையும் அறிவிப்பன கடவுள் வாழ்த்துப் பகுதி. அதில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்ற பெயர்கள் கடவுளைக் குறிப்பனவாக வழங்கப்பெறுவன. இவை கடவுளுடைய சிறப்பியல்பை அறிவிப்பனவேயன்றிப் பெயரல்லாமை சிந்தித்தற்குரியன. இவைகளைக் கொண்டு வள்ளுவர் ஒரு சமயத்தைச் சார்ந்தவர் என்று துணிதலும் முடியாத செய்தியாகும். இவற்றுள் வாலறிவன் என்பது, இறைவனுடைய முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் என்ற இருகுணங்களை அறிவிப்பது. தனக்கு உவமை இல்லாதான் என்பது, முடிவில் ஆற்றலுடைமையையும் வரம்பில் இன்பம் உடைமையையும் அறிவிப்பது, வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயில் ஐந்தவித்தான், ஆதிபகவன், இறைவன் என்பன தன்வயத்தனாதல் என்றதைக் குறிக்கின்றன. மலர் மிசை ஏகினான் என்பது, பேரருள் உடைமைக்கு அடிப்படை. இங்ஙனம் இறைவனின் குணங்களை இப்பெயர்கள் அறிவிக்கின்றன. இவைகளைக் கொண்டு திருவள்ளுவர் சமயத்தைத் துணிவது முடியாத தொன்றாகும்.

அங்ஙனமிருந்தும் ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் மதத்தினராகத் திருவள்ளுவரை ஆக்கிக் கொள்ள முயல்கின்றனர். சைனர்கள் வாலறிவன், மலர்மிசை ஏகினான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன் என்பன தம் கடவுளரையே குறிப்பன ஆதலால், இவர் சைனர் என்பர். அவர் காட்டும் காரணங்களாவன:- வாலறிவன் என்பது கேவல ஞானி 'உலகெலாம் உணர்ந்த மூர்த்தி உலகசிவா ஞானிவாரி' என்று சூடாமணி நிகண்டு கூறுகிறது. அன்றியும்

அறிவன் என்ற சொல்லாட்சி அருகக் கடவுளையே குறிப்பதை மேருமந்தர புராணம், நீலகேசி முதலியவற்றில் காணலாம். ஆதலால் இச்சொல் அருகக் கடவுளுக்கே உரியதென்பது. மலர்மிசை ஏகினான் என்பது, தேவர்களால் இடப்பட்ட தாமரை மலர்மேல் அருகக் கடவுள் நடந்தார் என்ற வரலாற்றை அமைத்துக் கூறப்பட்டது என்பர். அதற்கு மேற்கோளாக 'மலர்மிசை நடந்தோன் மலரடி' (சிலப். நாடு 204) முதலிய பல இடங்களில் அருகதேவனையே குறிப்பதைக் காண்க என்பர். பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதும், 'ஐவரை வென்றோன்' 'பொறியிலா அறிவன்' எனப் பல இலக்கியங்களில் அருகனை உணர்த்து கின்றன. அறவாழி அந்தணன் என்பது, தருமசக்கரத்தை முத்திரையாக உடைய ஜிநக்கடவுளைக் குறித்து வருவதைப் பல இலக்கியங்களிலும் பரக்கக் காணலாம் என்பர், இவற்றுள் பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதில் மட்டும் நாம் சிந்திக்க வேண்டிய சிந்தனை ஒன்று உண்டு. அவித்தல் என்பது கறி அவித்தான், பயறு அவித்தான் என்பன போல ஒரு பொருளின் தன்மையை மாற்றி அமைத்தலாம். அதாவது முளைக்கும் தன்மை வாய்ந்த பயற்றை முளையாதவாறு கெடுத்து மெலி தாக்கலே. அது போலப் பொறிவாயில் அவித்தான் என்ற வழியும் பொறிகள் சேட்டிக்கப்புக, அவற்றை வென்று அடக்கியவன் என்பது கருத்தாகும். அங்ஙன மாதல் கடவுள் தன்மைக்கு ஒவ்வாத ஒன்றாகும். சைன உரையாசிரியராகிய கவிராச பண்டிதரும் பொறிகளை வழியாகவுடைய மித்தையையறுத்தவன் என்று பொருள் காண்கிறார். யாருடைய மித்தையையென்பதை அவர் விளக்கவில்லை. ஆனால், வள்ளுவர் பெருந்தகை, ஐந்தவித்தான் என நீத்தாரையும் அழைக்கின்றார். நீத்தாராகிய அந்தணர், பொறிகள் புலவன்வழிச் செல்ல, அவைகளைத் தம் அறிவால் அடக்கி ஆண்டவர்கள். ஜினதேவர்க்கு அங்ஙனமன்று. இருந்தும் அவரைப் பொறிவாயில் ஐந்தவித்தான் என்றது சிந்தித்தற்குரியது.

என்குணத்தான் என்பது, இளங்கோவடிகளால் சித்த பரமேட்டியைக் குறிக்குமிடத்து ஆளப்பட்டது. பரிமேலழகரும் 'கடையிலா அறிவை முதலாக உடையன என்று உரைப்பாரும் உளர்' என்றார். ஆதலால் இவர் சைனர் என்பர்.

பவுத்தர், கடவுள் வாழ்த்தில் மலர்மிசை ஏகினான் என்பது இறந்த காலத்தாற் கூறப்பெற்றுள்ளமையின், கௌதமபுத்தர் மாயாதேவியினுடைய கருவிலிருந்து வலது விலா வழியாக அவதரித்தருளிய காலத்து, நீலத்தாமரை மேல் ஏழடி நடந்தார் என்ற வரலாற்றை அமைத்தே அது ஆக்கப்பட்டது என்பர். அன்றியும் பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதும், வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதும் மாரனை வென்ற வீரன் ஆதலை விளக்கின. அறவாழி அந்தணன் என்பதும் தர்ம சக்கரத்தை உலகியல் பல வகையாக உருளச்செய்த நீத்தோன் ஆதலின் வந்த பெயர். தர்ம சக்ரப் பிரவர்த்தனாசாரியன் என்பதும் புத்தருக்குப் பெயராதல் இதனை வலியுறுத்தும். 'ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்' (மணி. 10.61) அருளாழி நயந்தோய் நீ அறவாழி பயந்தோய் நீ (வீர.யாப்பு. 11) என்பன, இக்கருத்தை அடியொற்றி எழுந்தனவே. இவைகளால் இது புத்தப் பெருமானைக் குறிக்கும் சொற்றொடரே எனத் துணியலாம் என்பர்.

துன்பம் அற்ற நிலை துறவு; துறந்தவர்களே வீட்டின்பம் அடைந்தவர்கள்; ஆசை உற்றவர்கள், பிறவியாகிய வலையில் அகப்பட்டவர்கள் என்று, துறவினால் அல்லது வீடு சித்தியாது என்பதனை வற்புறுத்திக் கூறுவதால், கொள்கையாலும் திருவள்ளுவர் புத்தசமயத்தினராவர் என்பர். இந்த மேற்கோள்கள், ஏனைய சமய நூல்களாலும் எடுத்தாளப் படுகின்றமையின், பவுத்தம் ஒன்றற்கே

உரியது என்மை துணியப்படும்.

வைணவர்கள், ஆதிபகவன் என்ற சொற்றொடரை 'அந்தமில் ஆதியம் பகவன்' என்றும், வாலறிவன் என்பதை 'அடலாழி கொண்ட அறிவன்' என்றும், மலர்மிசை ஏகினான் என்பதை 'மனனக மலமற மலர்மிசை எழுதரு மனனுணர் வளவினன்' என்றும், வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதைக் 'கொள்கை கொளாமை இலாதான்' என்றும், இறைவன் என்பதை 'இருந்தான் என்னுள்ளத்து இறைவன்' என்றும் பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதைத் துவாதச திரு நாமங்களில் ஒன்றாய் இருடீகேசன் என்பதன்மொழிபெயர்ப்பு என்றும், தனக்கு உவமை இல்லாதான் என்பதைத் 'தன்னொப்பார் இல்லப்பன்' என்றும், அறவாழி அந்தணன் என்பதை 'அறவனை ஆழிப்படை அந்தணனை' என்றும் ஆழ்வார்கள் அமைத்து அருளிச்செய்திருப்பதால், இவைகள் திருமாலை உணர்த்தும் சொற்களாம் என்பர். மேலும் வாத்ஸல்யாதி எட்டுக் குணங்களையும், அபஹதபாப்மத்வம் முதலான அஷ்ட குணங்களையும் வைணவ ஆகமங்கள் கூறுவதால், எண்குணத்தான் என்பது திருமாலை உணர்த்தும் என்பர். இக்கருத்து, சடகோப ராமாநுசாச் சாரிய சுவாமிகள் எடுத்துக் காட்டியதாகும்.

இதில் சொல் ஆட்சியையும் என் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டு வைணவமாதல் தெரிவிக்கப் பெற்றது. இக் கருத்துக்கள் ஏனைய கடவுளர்கட்கும் இருத்தலின், வைணவம் என்பது சாலாது என்பது ஆசிரியர் வலாற்றில் அவர்களே குறித்துள்ளார்.

மேலும் 'தாமரைக் கண்ணான் உலகு', 'அடியளந்தான்தாஅயது எல்லாம் ஒருங்கு' என்ற வரலாற்று ஆட்சிகள், வள்ளுவர் வைணவராதற்குச் சான்றுதல் கூடும். இதற்கு ஸ்ரீமத் ஐயங்கார் அவர்களே இதயகமலத்தில் உள்ளான் என்றும், மடியிலா மன்னவனுக்குத் திருமாலின் இரண்டடிக்கும் போதாத மண்ணை அடைதல் எளிது என்பதை விளக்க வந்ததேயன்றித் திருமாலிடம் அன்புகொண்டு உரைத்தது அன்று என்றும் கூறுவர். பரிப்பெருமாள் 'தாமரையிடத்து இருப்பவனாகிய அயன் உலகு' என உரை காண்பர். இவற்றால் திருவள்ளுவர், வைணவர் என்று துணிந்துவிட முடியாது.

இனிக் கொள்கைவகையால் திருவள்ளுவர் சமயநிலையை ஆராய்வோம். இவ் ஆராய்ச்சியை முற்றமுடித்துச் சித்தாந்த சைவரே எனத் தெளிவு படுத்தியவர் ஸ்ரீமத் வாலையானந்த சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் சில கொண்டு தெளிவாம்.

திருவள்ளுவர் உலோகாயதரா? உலகாயதர் என்பார், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பவர்கள். காட்சியளவை யொன்றையே ஒப்புகின்றவர்கள். பூதங்களில் ஆகாயம் என்பதொன்றில்லை என்பவர்கள். அரிவையர் இன்பமே முத்தி என்பவர்கள். இவர்களில், உடலே உயிர்; தாய்தந்தையரே கடவுள் என்னும் தேகான்ம வாதிகளும், பொறிகளே புலன்களை அறிவதால் அவைகளே உயிர் என்னும் இந்திரியான்ம வாதிகளும், உயிர்ப்பு இயங்குங் காலத்தில் உணர்வதாலும், உயிர்ப்பு ஒழிந்த காலத்தில் உணர்ச்சி யற்றுப் போவதாலும் உயிர்ப்பே உயிர் என்னும் பிராணான்ம வாதிகளும் உளர். அவர்கள் எல்லோரும் வள்ளுவர்பெருமானைத் தம்மவராக்கிக்கொள்ள, தமது முத்தி நிலையை வள்ளுவர் 'தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணானுலகு' என்ற குறளால் வைகுந்த நிலையினும் அரிவையர் இன்புறுபோகமே முத்தி என்பதை வற்புறுத்துகிறார்; ஆதி பகவன் முதற்றே எனத் தாய்தந்தையர்களையே முதல்வராகக் கொள்கின்றார் என்பவற்றை

எடுத்துக்காட்டுவார்கள். ஆனாலும், 'இன்பம் இடையறா தீண்டும்' 'பேரா இயற்கை தரும்' என்று கூறுவதாலும், 'ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப், பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' என்ற குறளால் ஆன்மா, கேட்ட உபதேசப் பொருளை ஆராய்ந்து, என்றும் நிலைத்த பொருளாகிய இறையை அறியப்பெறின், பிறவி வலையிற் சிக்காது என்று கூறுவதாலும் பிறவித் துன்பத்துட் பொருந்தாமையே முத்தி என்பது, அவர் கருத்தாதல் தெளியப்பெறும். மேலும் 'பூதங்கள் ஐந்தும்' என்று கூறுவதாலும், 'உடம்பொடுயிரிடை' யெனப் பிரித்து உடம்பைக் காட்டிலும் உயிர் வேறு என விதத்தலாலும், பல குறளால் கடவுள் ஒருவர் உண்டு என்று வலியுறுத்திப் போதலாலும், 'ஐந்தின் வகை தெரிவான்' எனவும் ஐந்தவித்தான்' எனவும் இந்தியரியங்களைக் காட்டிலும் உயிர் வேறு என்பதை விளக்குதாலும் இவர் உலகாயதர் அல்லர் என்பது தெளிவு.

பௌத்தரா? பௌத்தர்கள் ஞானமே கடவுள்; ஞானமே ஆன்மா என்றும் கருத்துடையவர்கள். அவர்களுக்குப் பத முத்திகள் உடன்பாடில்லை. மேலும் கொல்லுதல் கூடாது, கொன்றதை உண்ணலாம் என்பதும் அவர்கள் கொள்கை. திருவள்ளுவரோ மாணடிசேர்தலாகிய அடிசேர் ஞானத்தைக் கூறுதலாலும், முதற் குறளால் எடுத்துக் காட்டுவமை வாயிலாக இறை உண்மையைச் சாதித்தலாலும் 'அறிதோறறியாமை கண்டற்றால்' என ஞானத்தின் வேறாய் உயிர் உண்டு என்று உணர்த்துதலாலும். 'தாமரைக்கண்ணான் உலகு' புத்தேள் உலகு' எனப் பதவிகளை உணர்த்துதலாலும், 'தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும் விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல்' எனப் புலால் உண்டலை அடியோடு மறுத்தலாலும் பௌத்தர் அல்லர் என்பது தெளிவு.

சமணரா? ஆகாயம் ஒழிந்த ஏனைய பூத அணுக்களின் கூட்டுறவால் உயிர் அணுவினைக்கு ஈடான உடலை எடுக்கின்றது. இவ் அணுக்களுக்கு வேறாய்க் கடவுள் ஒருவர் உண்டு என்பதும், உடை இல்லாமையும், முக்குணங்கள் கெடுவதே முத்தி என்பதும் இவர்கள் கொள்கை. திருவள்ளுவர், உயிர்கள் வினைக்கு ஈடான உடலைத் தாமே எடுத்துக் கொள்வதில்லை; வினைகளும் அறிவற்றன ஆகையால் உயிர்களைத் தாமாகச் சென்று அடையமாட்டா ஆதலால் வகுத்தான் ஒருவன் வேண்டும் என்று கூறுதலாலும், உடையின் இன்றியமையாமையை 'உடுக்கை இழந்தவன் கைபோல' என்று உவமையில் வைத்து வற்புறுத்திக் கூறுதலாலும், 'மாணடி சேர்ந்தார்' என அடிசேர் முத்தியைவற்புறுத்தலாலும் திருவள்ளுவர் சமணர் அல்லர்.

ஏகான்ம வாதியா? வஸ்து ஒன்றே; உலகமும் உலகத்துப் பொருள்களும் கானல்நீரைப் போலக் காணப்படுவனவேயன்றி உண்மை அல்லாதன என்பது அவர்கள் கொள்கை. திருவள்ளுவர், காணப்பட்ட உலகத்தால் காணப் படாத கடவுட்கு உண்மை கூறுதலால் உலகம் முதலான பொருள்கள் உண்டு எனக் கொள்கிறார். 'வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று' என்பதால், உயிர்கள் ஒன்று அல்ல பல என்பதே திருவள்ளுவர் கொள்கை. ஆதலால் இவர் ஏகான்ம வாதியும் அல்லர்.

மாயாவாதியா? பரப்பிரமம் ஒன்றே உள்ளது; ஏனைய உயிர்கள் உண்டு என்றல் இப்பியை வெள்ளி என '[illegible]போல உண்மை அல்லாதது; பிரமசொபருத்தை நான் என்று அறிவதே முத்தி என்பது அவர்களுடைய முடிபு. சத்காரியவாதம் கூறும் முதற் குறளாலும், 'பல்லுயிர்' என்று கூறுவதால் ஏகமாகிய இரண்டற்ற பரமான்மாவைக் காட்டிலும் சீவான்மா பல உண்டு என்பதாலும் இவர் மாயாவாதி அல்லர் என்பது தெளிவு.

எப்படிச் சொல்வது? சொர்க்க நரகங்களைக் கூறுதலாலும், தேவர் நரகர் விலங்கு என உயிர்கள் செய்த வினைக்கு ஏற்ப மறுபிறப்பு உண்டு என்று கூறுதலாலும், அவரவர்கள் செய்த வினைக்கு ஈடாகப் போகங்கள் பொருந்துமென்க் கூறுதலாலும், கன்மபலனைக் கொடுப்பவன் இறைவனே என்பதாலும், அருளின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டி அதுவே வீட்டிற்கு வாயில் என விளக்குவதாலும், தீவினைக்கு உடந்தையாயிருந்தார்க்கும் தீவினைப் பயன் சாரும் என்பதாலும், 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' என வீட்டுலகத்தைச் சிறப்பித்தலாலும், மேலும் மேலும் பிறப்பு உண்டாவதற்குப் 'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்' மருளே காரணம் என்று கூறுவார் போலப் பிறவி அறுதலுக்குப்பொருளைப் பொருளாக உணர்தலாகிய உண்மை ஞானமே உபாயம் எனக் கூறுதலாலும், அகப்பற்று புறப்பற்று அறுதலும், மல மாயைகள் அறுதலும், அவா அறுதலும், பொறிகளை அடக்குதலும், தெளிந்த ஞானமுடையாருகலும் ஆகிய இவைகளே வீடு அடைதற்கு உரிய சிறந்த சாதனங்கள் எனத் தெரிவித்தலாலும், 'ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்' என்ற குறளில், உள்ளது என்ற தொடரால் நித்தியவஸ்துவாகிய இறைவனும், உள்ளம் என்பதால் உயிரும், உணரின் என்ற செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தால் உணராமைக்கு ஏதுவாகிய தடைகளும், அத் தடையை நீக்கி உணரும் உயிர்களுக்கு மீட்டும் பிறவி இல்லை என்பதும் உணர்த்தப் பெறுதலின், உயிர் இறை கட்டுக்களையும் அவற்றை நீக்கும் உபாயத்தையும் பயனையும் உணர்த்துதலாலும் இவ்வியல்புகளைத் தமக்கு உடைய சமயத்தினராக இருக்கலாம் என்பது தெளிவு.

-*-

= மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர்

<u>திருக்குறள்</u>
<u>அழகும் அமைப்பும்</u>.

பேராசிரியர் ஞா.தேவநேயனார் கருத்துக்கள்:

சமயம்

ஆரியர் வருமுன்னரே, தமிழர் சமயத்துறையில் தத்தம் அறிவு நிலைக்கேற்ப, சிறு தெய்வ வணக்கத்தாரும் பெருந்தேவ வழி பாட்டாரும் கடவுள் மதத்தாரும் ஆக முந்நிலைப்பட்டிருந்தனர்.

இம்மைப் பயனையே அளிப்பனவாகக் கருதப்பெறும் இடத்தெய்வங்களும் பூதத்தெய்வங்களும் நடுகல் தெய்வங்களும் சிறு தெய்வங்களாம். இம்மையில் மழையையும் மறுமையில் விண்ணுலகவின்பத்தையும் அளிப்பவனாகக் கருதப்பெற்ற வேந்தன் பெருந்தேவனும். இம்மையில் இவ்வுலக இன்பத்தோடு மறுமையில் பிறவி நீக்கப் பேரின்பவீட்டையும் அருள்பவனாக கருதப்பெற்ற இறைவன் எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் கடவுளாம். முதற்கண்சிறுதெய்வ வணக்கமாகவிருந்து பின்பு பெருந்தேவ வழிபாடாகவுயர்ந்த சேயியமும் மாலியமும் இறுதியில் முறையே சிவனியம் திருமாலியம் என்னும், வீடுபேற்று மதங்களாக வளர்ந்து விட்டன. ஆயின், கடவுள் மதத்தார் கடவுள் என்னுஞ் சொற்கேற்ப அவ்விரண்டிற்கும் பொதுவாயிருக்க வேண்டியதாயிற்று.

"அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்", "பன்னேனுனக்கான பூசை" என்னும் தாயுமானவர் பாட்டுக்களும், "உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையும்" "சொல்லிலும் சொல்லின் முடிவிலும்" "எட்டுத் தசையும் பதினறு கோணமும்" என்னும் பட்டினத்தார் பாட்டுக்களும் கடவுளியல்பைத் தெளிவாகக் காட்டும்.

சிவனியமும் திருமாலியமும் முறையே சிவன் என்னும் பெயராலும் திருமால் என்னும் பெயராலும் கடவுளையே வணங்கும் வீடு பேற்று மதங்களாம். ஆதலால் கிறித்தவமும் இசலாமும் போலக் கொள்கையால் வேறுபடினும் தெய்வத்தால் ஒன்றும் எனினும், உருவ வணக்கங் கொள்வதால் வீடுபேற்று மதங்களேயன்றிக் கடவுள் மதமாகா.

கடவுட் கொள்கையும் கோயில் அல்லது உருவவழிபாடுமில்லாத ஆரியா, சிவனியம், திருமாலியம் என்னும் இரு தமிழ் மதங்களையும் ஆரியப்படுத்தற்கும், தம்மினு முயர்ந்த தமிழரை அடிமைப்படுத்தற்கும் கடவுள் முத்தொழிலோன் என்னுங் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு, பிரமன் என்னும் ஒரு தெய்வத்தைப் புதிதாகப் படைத்து, அப்பிரமன் படைப்போனென்றும் திருமால் காப்போனென்றும் சிவன் அழிப்போனென்றும் முத்திருமேனிக் கொள்கையைத் தோற்று வித்துவிட்டனர்.

சிவனையும் திருமாலையும் சிவனியரும் திருமாலியரும் முத்தொழில் இறைவனென்றே கொள்வதாலும் முத்திருமேனியர்க்கு முதல்வனொருவன் வேண்டியிருப்பதினாலும் தமிழ் அறிஞரும் கடவுள் மதத்தாரும் முத்திருமேனிக் கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை.

கடவுள் மதமாவது, காலமும் இடமும் போல முதலும் முடிவும் உருவமும் நிறமுமின்றி, இயல்பாகவே எங்கும் நிறைந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும் எல்லாம் அறிந்தவனாகவும், எல்லாம் உடையவனாகவும், முற்றின்பனாகவும், முழுத்தூயனாகவும், எல்லையில்லா அருளனாகவும், எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தழிப்பவனாகவு மிருந்து ஒப்புயர்வற்று மனமொழி கடந்த கடவுளை, உள்ளத்தில் எங்கும் என்னும் தொழுது, எல்லாவுயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண்டொழுகுதலேயாம். திருவள்ளுவர் சமயமும் அதுவே,

இதனாலேயே அவர் எச்சமயத்தையுந் தழுவாது எல்லாச் சமயங்கட்கும் பொதுவாகக் கூறியதும், எல்லாச் சமயங்களும் கூறும் இறைவன் பெயர்களையும் கடவுட்குப் பொருத்தியதும் என்க.

–திருக்குறள் தமிழ் மரபுரை, பக்கம் 14-15.

திருவள்ளுவரின் மெய்ப்பொருள் மேம்பாடு:

திருவள்ளுவர் அறிவியலிலும் அரசியலிலும் மட்டுமன்றி, மெய்ப்பொருளியலிலும் மேம்பட்டவராவர். ஆயினும், தமிழர் அவரை அறியாதும் புறக்கணித்தும், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அயலாரும் தமிழ்ப் பகைவரும் இறப்ப இழிந்தாருமான ஆசிரியரைப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

உலகத்தில் ஒப்புயர்வற்றவரென ஆரியர் பறைசாற்றிவரும் ஆதிசங்கராச்சாரியார், சிவனியம், மாலியம், குமரம், மூத்த பிள்ளையம் (சாணபத்தியம்) காளியம், கதிரவம், என்னும் அறுமத நிறுவனராகப் பாராட்டப் படுகின்றார். திருவள்ளுவரின் கடவுள் மதத்தொடு அதை ஒப்புநோக்கின், விண்ணிற்கும் மண்ணிற்குமிடைப்பட்ட வேற்றுமையாம். சங்கராச்சாரியாரின் இரண்டன்மை (அத்துவதி)க் கொள்கையில் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டுள்ளமையின், பேதையரே போற்றத் தக்கதாம்.

திருவள்ளுவரின் இருபத்தாறு மெய்ப்பொருட் கொள்கையும் அவர் உயர்வை விளக்கிக் காட்டும்.

திருவள்ளுவர் எம் மதத்தார்?

ஆரியத் தெய்வமாகிய நான்முகனை யுட்கொண்ட முத்திருமேனிக் கொள்கையைத் தழுவாமையின், திருவள்ளுவர் வைதிகரல்லர்.

கடவுளில்லை யென்றும், பூதங்கள் நான்கேயென்றும் ஒருவர் கொன்றவுயிரியின் ஊனை இன்னொருவர் உண்ணின் குற்றமன்றென்றும், கூறும் பவுத்தக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாமையால் திருவள்ளுவர் பவுத்தரல்லர்.

உலகிற்கு ஒரு முதல்வன் வேண்டுவதில்லையென்றும், இல்லறத்தினும் துறவறம் சிறந்ததென்றும், மகளிர்க்கு வீடுபேறில்லை யென்றும், மெய்யுணர்விற்கு இன்றியமையாத 'சுக்கிலத் தியானம்' என்னும் பரமவூழ்கம் இக்காலத்தில் நிகழ்வதில்லையென்றும், கூறும் சமணக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாமையால் திருவள்ளுவர் சமணரல்லர்.

கடவுளில்லையென்றும், மெய்ப்பொருள் இருபத்தைந்தேயென்றும், கூறும் சாங்கியக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாமையால் திருவள்ளுவர் சாங்கியரல்லர்.

கடவுள் தோற்றரவு கொள்வாரென்பதையும் உருவ வழிபாட்டையும் ஒப்புக் கொள்ளாமையால், திருவள்ளுவர் மாலியர் (வைணவர்) அல்லர்.

மெய்ப்பொருள் முப்பத்தாறு என்பதையும் உருவ வழிபாட்டையும் ஆரியச்சார்பையும் ஒப்புக்கொள்ளாமையால், திருவள்ளுவர் சிவனியர் (சைவர்) அல்லர்.

"ஓது மெழுத்தோ டுயிர்க்கலை மூவஞ்சு
மாதி யெழுத்தவை யைம்பத்தோ டொன்றென்பர்"
(திருமந். சு ...)

என்னும் ஒன்றே சிவனிய ஆரியச் சார்பைக் காட்டப் போதிய சான்றாம்.

இற்றைச் சிவனியம் மாலியத்தினும் ஆரியம் மிகுந்துள்ளமை, என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விரிவாக விளக்கப்பெறும்.

இனி, திருவள்ளுவர் எம்மதத்தார்தாமெனின், தாயுமானவர் 'அங்கிங்கெனாதபடி' யென்னும் கடவுள் வணக்கச் செய்யுளிற் கூறியுள்ளவாறு, கடவுள் மதத்தினர் என்று கூறிவிடுக.

வீடுபேற்று விளக்கம்:

இல்லறத்தாலும் வீடுபெறலாமென்பது தமிழர் மதமும் திருவள்ளுவர் கொள்கையுமாகும்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல் (௩௮)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவதெவன். (௪௬)

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை (௪௭)

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து (௪௮)

என்னுங் குறள்களை நோக்குக.

துறவறமும் ஒரு குலத்தார்க்குமட்டும் உரியதன்றி எல்லார்க்கும் பொதுவாம். அவாவும் செருக்கும் அடியோ டொழிந்தாலொழிய ஒருவன் வீட்டையடைய முடியாது.

"பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லெவருக்குந் தாழ்ச்சிசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே".

(பட்டினத்தார் பாடல்)

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (௩௪)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. (௩௪௫)

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றித் தொழுஉம் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்
ஆற்றைக் கடக்கத் துறைதெரி யாமலலைகின்றையே.

(பட்டினத்தார் பாடல்)

இச்செய்யுட்களால், சிறபிள்ளைபோல் மறுபடியும் பிறந்து செருக்கடங்கி ஆசைவேரறுத்தவரன்றி, செல்வத் தொடர்புள்ளவரும், ஆரவாரமாக ஆடையணிபவரும் தம்மைப் பிறப்பாற் சிறந்தவராகக் கருதுபவரும், மனாடொழுரிய மந்திரங்களை யோதுபவரும், வடமொழியைத் தேவமொழியென்றும் தென்மொழியைக் கீழோர் மொழி (நீசபாஷை) யென்றுங் கூறுபவரும், திருக்குறளை ஓதக்கூடாதென்பவரும், வீட்டுலகையடைவது ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவதினும் அரிதாயிருக்குமென்று அறிந்து கொள்க.

இனி, விருந்தோம்பாமையால் இல்லறவகையாலும் செருக்கடங்காமையால் துறவறவகையாலும், ஆரியர் வீட்டையடைவதும் இயலாதென அறிந்து கொள்க.

-திருக்குறள் தமிழ் மரபுரை, பக்கம்
[illegible]4-627.

திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கருத்து:

திருக்குறளில் பௌத்தமும் சமணமும்:

திருக்குறளில் உள்ள ஜைன சமயக் கருத்துக்களைப் பார்ப்போம்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் இந்தக் கடவுள் வாழ்த்துக் குறட்பாவில் 'ஆதிபகவன்' என்பது ஜைன (சமண) சமயக் கடவுளைச் சுட்டுகிறது. ஆதிபகவன் என்பதை எல்லா மதக் கடவுளுக்கும் பொருத்தலாம் என்றாலும் சிறப்பாக அது சமண சமயத்து அருகக் கடவுளையே குறிக்கிறது. அருகக் கடவுளராகிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் முதல்வராகிய இரஷப தேவர், ஆதிநாதர் என்றும் அதிபகவர் என்றும் கூறப்படுகிறார். ஆகையால் ஆதிபகவன் என்பது சிறப்பாக அருகக் கடவுளையே சுட்டுகிறது என்று கூறலாம்.

'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

இந்தக் குறட்பாவில் கூறப்பட்ட 'மலர்மிசை ஏகினான்' என்னும் சொற்றொடர் சமண சமயத்து அருகக் கடவுளை (தீர்த்தங்கரரை)ச் சுட்டுகிறது. இது, பகவான் புத்தரையும் சுட்டுகிறது என்று முன்னமேயே கூறினோம். இந்தச் சொற்றொடர் அருகக் கடவுளையும் சுட்டுகிறது. என்னை? அருகப் பெருமான் எழுந்தருளும்போது தாமரைப் பூக்கள் தோன்றி அவருடைய திருப்பாதங்களைத் தாங்குகின்றன என்பது சமண (ஜைன) சமயக் கொள்கை. இந்தக் கொள்கையைச் சமண சமய நூல்களில் காண்கிறோம். இதற்குப் பல மேற்கோள்கள் காட்டக் கூடும். விரிவஞ்சி மூன்று மேற்கோளை மட்டும் காட்டுகிறோம்.

சைன சமயத்தவராகிய கவுந்தி அடிகள் அருகக் கடவுளை ஏத்தியபோது,

'மலர்மிசை நடந்தோன் மலரடி அல்லதென்
தலைமிசை உச்சிதானணிப் பொறாஅது"

என்று கூறுகிறார்.

'பண்டாக மத்தூட் பயிலாவுரை யென்று மிக்கார்
விண்டுங் கிதனை வெருளார் விடல் வேண்டுவன்யான்
தண்டா மரைமேல் நடந்தான் நடந்தாள் வணங்கிக்
கண்டேன் கிடந்தேன் கனவின்னிது கண்ட வாறே" (நீலகேசி)

'தாமரையே எத்தவங்கள் செய்தாய் சகமூன்றிலுக்குந்
தாமரையே என்று சாற்றவ போலுமுச் சத்திரத்துத்
தாமரைசேர் திருவைத் திருமார்பில் தரித்த வர்செந்,
தாமரைவெய் சரணந் தலைமேற் கொண்டு தாங்குதற்கே'
(திருநூற்றந்தாதி)

இதனால் 'மலர்மிசை ஏகினான்' என்பது, பகவான் புத்தரைக் குறிக்கிறது போலவே, அருகக் கடவுளையும் சுட்டுகிறது என்பது தெளிவாகிறது. ஏனைய மதத்துக் கடவுளர்கள் தாமரை போன்ற திருவடிகளையுடையவர்கள் என்று கூறப்படுகிறார்களே யல்லாமல் தாமரைமேல் நடந்த திருவடிகளையுடையவர் என்று கூறப்படுவதில்லை. மலர் என்பதற்கு இதயமாகிய மலர் என்று வலிந்து பொருள் கூறுகிற பரிமேலழகர், புத்தரும் அருகரும் தாமரைமேல் நடந்தவர் என்பதைக் கருத்தில் கொண்டு 'பூமேல் நடந்தான் என்பதொரு பெயர்பற்றிப் பிறிதொரு கடவுட்கேற்றுவாருமுளர்' என்றும் விளக்கங் கூறியதை கருதுக.

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்'

இதில் கூறப்பட்டுள்ள 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பது பகவான் புத்தருக்குப் பொருந்துவது போலவே, அருகக் கடவுளராகிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்க்கும் பொருந்தும். என்னை? சமண சமயத்துத் தீர்த்தங்கரர்கள் (அருகக் கடவுளர்) மனிதராகப் பிறந்து பொறிவாயில்கள் ஐந்தினையும் அவித்துப் பிறவி நீங்கிக் கடவுள் நிலையையடைந்தார்கள் என்று ஜைன சமய நூல்கள் கூறுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளைப் பெற்றவர் தாமே அவற்றை அவிக்க முடியும்? ஐம்பொறிகளும் இயற்கையாகவே இல்லாத கடவுளர்கள் ஐம்பொறிகளை அவிக்க வேண்டியதில்லையன்றோ? ஆகவே, இக்குறட்பா கூறுகிற 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பது பகவான் புத்தரைக் குறிப்பது போலவே, அருகக் கடவுளையும் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

'அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது'

இதில் 'அறவாழி அந்தணன்' என்பது பகவான் புத்தரைக் குறிப்பது போலவே, அருகக் கடவுளையும் சுட்டுகிறது. அருகப் பெருமானும் அறவாழியை (தரும சக்கரத்தை) யுடையவர். அவருடைய அறநெறி அறவாழி என்று கூறப்படுகிறது. ஜைனர் இன்றும் தங்களுடை கோயில்களில் தருமசக்கரத்தை வைத்து வணங்குகிறார்கள். அருகர் (தீர்த்தங்கரர்) எழுந்தருளும்போது அவருக்கு முன்னால் அறவாழி செல்கிறது என்பது ஜைனரின் நம்பிக்கை. இந்த அறவாழி, மறவாழி யன்று என்பதை மேலே விளக்கினோம். எனவே, 'அறவாழி அந்தணன்' ஜைனரின் அருகக் கடவுள் என்று கொள்வதில் சிறிதும் தடையில்லை. உரையாசிரி ராகிய பரிமேலழகர், இக்கருத்தையுட்கொண்டே தம்முடைய உரையில் 'அறவாழி யென்பதனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்றுரைப்பாருமுளர்' என்று எழுதியுள்ளார்.

திருக்குறளை எல்லா மதத்தாரும் போற்றுகிறார்கள். தத்தம் மதக் கொள்கைகளுக்குத் திருக்குறட் பாக்களை மேற்கோள் காட்டுகிறார்கள். பல சமயத்தவர் திருக்குறளு உரை எழுதி இருக்கிறார்கள். ஆனால், சமணர் மட்டும்தான் திருக்குறளை 'எங்கள் வேதம்' என்று உரிமை கொண்டாடினார்கள். சமண சமய நூலாகிய நீலகேசிக்கு உரை எழுதின சமயத்திவாகரவாமன முனிவர் தம்முடைய உரையில் திருக்குறளை மேற்கோள் காட்டி இது எங்களுடைய ஓத்து (வேதம்) என்று எழுதியுள்ளார். நீலகேசி மொக்கலவாதச் சருக்கம் 60-ம் செய்யுள் உரையில் அவர்,

'ஒருத்தனை யவ்வாறு அழிக்க வேண்டினால் எமக்குக் கை காட்டியும் நிலங்காட் வஞ்சனையாற் கொள்ள வேண்டுவதில்லை; என்னை?

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

என்பது எம்மோத்தாதலால் பிராணி பீடா நிவ்ரத்யர்த்தமாகப் பொய்யுரைத்தலுமாவதாதல் லென்பது' என்று எழுதியுள்ளார். இந்த ஜைன ஆசிரியர் திருக்குறளை 'எம்ஓத்து' (எங்களுடை வேதம்) என்று கூறுவது காண்க.

இந்தச் சான்றுகளைக் கொண்டு திருக்குறள் பௌத்த ஜைன சமயங்களுக்கும் சார்பான நூல் என்பது தெரிகிறது. காய்தல் உவத்தல் இன்றி நோக்குவார்க்கு இவை விளங்கும்.

மெய்திரு (டாக்டர்) எஸ். இராசமாணிக்கம், எஸ். ஜே. அவர்கள் கருத்து.

கிறித்துவ மதத்தைப் பொறுத்தமட்டில் திருக்குறள் எவ்வாறு ஒத்துவருகிறது அல்லது மாறுபட்டு வருகிறது என்பதை ஈண்டுக் கவனிப்போம். ஒவ்வொரு மதத்திலும் அடிப்படையான கொள்கைகள் அவற்றைத் தழுவிய ஒழுக்க விதிகள், வழிபாடுகள் முதலியன உள்ளன. கிறித்துவ மதத்தில், சிறப்பாகக் கத்தோலிக்கத் திருச்சபையில் உள்ள கொள்கைகள் பின்வருமாறு:

கடவுள் ஒருவர் உண்டு. தந்தை, மகன், தூய ஆவி என்ற மூன்றுட்களாய் இருந்தாலும் அவர் ஒரே கடவுள். உலகில் உள்ள அனைத்தும் உயிருள்ளன, இல்லன எல்லாம், அவரால் மனிதனுக்காகப் ஒன்றுமில்லாமையிலிருந்து படைக்கப்பட்டவை, ஒவ்வொரு மனிதனுக்கும் அழியாத ஆன்மா ஒன்று உண்டு. அவனுக்கு ஒரே பிறப்பு, ஒரே சாவு. மேலும் மனுக்குலம் முழுவதும் ஆதாம் ஏவை என்ற ஆதித்தாய், ஆதித் தகப்பனுல் தொடங்கும் ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள். ஆதித்தகப்பன் செய்த தீவினையால் மனுக்குலம் கெட்டழிந்தது.

மனிதனை மீட்க இரண்டாம் ஆளாகிய கடவுள் மனிதனுனர். அவர்தாம் கிறித்து பெருமான். அவர் மனுக்குல மக்கள் அனைவரது தீவினைக்காகச் சிலுவையில் பாடுபட்டு, செந்நீர் உகுத்து, தம் உயிரைப் பலியாகக் கொடுத்து மனுக்குலத்தை மீட்டார். அவரது அருள் துணையின்றி எவருக்கும் மீட்பு இல்லை. அவர் தமது அவையை நடத்தக் கத்தோலிக்கத் திருச்சபையை ஏற்படுத்தினர். அதற்குத் தலைவர் பாப்பு ஆண்டகை. திருமுழுக்கு என்ற சடங்கால் கிறிந்தவன், கடவுளுக்கும் திருச்சபைக்கும் பிள்ளையாகப் பிறக்கிறுன். பிற அருட் சாதனங்களால் அவனுக்குப் பாவ மன்னிப்பும் திருவருளும் கிடைக்கின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணம் கடவுள் ஏற்படுத்தியது. அதை அரசாங்கமோ, மணமக்களோ, வேறு எவரோ முறிக்க முடியாது. உலக முடிவில் எல்லோரும் உயிர்த்து எழுவார்கள். அப்போது அவர்களைக் கிறித்து பெருமான் அவனவன் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி தீர்ப்பளித்து, அவனவனுக்கு என்றுமுள்ள மோட்சம் அல்லது நரகம் கட்டளையிடுவார். அடியார் பலர் வழியாக விவிலியம் என்ற நூலைக் கடவுள் அருளினர். ஆகவே அது கடவுள் வாக்கு.

இவை தவிர, கிறித்தவர்க்கான சட்டதிட்டங்கள் பல உள்ளன. ஆனுல், அவற்றையெல்லாம் "எல்லாத்தையும் பார்க்கக் கடவுளை நேசி, உன்னை நேசிப்பது போல் உன் அயலானை நேசி" என்ற இரு கட்டளைகளில் கிறித்துபெருமான் சுருக்கிக் கூறினர். மேலும் திருச்சபை அதிகாரிகளுக்குச் செவிசாய்ப்பவன் தமக்குச் செவிசாய்க்கிறுன் என்று கிறித்து கூறியபடியால், நடைமுறையில் திருச்சபை வாக்கு கடவுள் வாக்காக அமைகிறது. எனினும் கடவுள் அருளியதற்கு எதிராக எதையும் கட்டளையிடத் திருச்சபைக்கு அதிகாரம் இல்லை". இவ்வாறு கிறித்துவ மதத்தின் கொள்கைகளை ஒருவாறு சுருக்கிக் கூறலாம்.

இந்தக் கொள்கைகளில் ஒன்றும் திருக்குறளில் இருப்பதாகத் தெரியவில்லை. கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் இறைவன் ஒருவனைப் பற்றிப் பேசுகிறுர். ஆனுல், கடவுள் இல்லையென்று கூறும் சமணர் தரும் விளக்கத்தைப் பார்த்தால் மனமொழி கடந்த எல்லாம்வல்ல கடவுள் ஒருவரைத் திருவள்ளுவர் ஏற்கிறுரா இல்லையா என்ற ஐயப்பாடு கூடத் தோன்றலாம். "ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினன், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன்" முதலிய தொடர்கள் தீர்த்தங்கரரைக் குறிக்கின்றன என்று சமணர்கள் பல சான்றுகளோடு காட்டுகிறுர்கள். எனினும், பிற மதத்தினரும் தத்தம் மதக் கொள்கைப்படி பொருள் கூறும் அளவுக்குப் பொதுப்படக் கடவுள் வாழ்த்து அமைந்திருக்கிறது. ஆனுல், வள்ளுவரது சொந்தக் கொள்கை எவ்வெவன்று வரலாற்று முறைப்படி ஆராயப்படல் வேண்டும். அதற்குப் போதிய சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

முதலாவது வள்ளுவரது காலத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமை உளது. வெள்ளைவாரணர், அப்பாத்துரை, மறைமலை அடிகள் முதலியோர் கூறுவது போல அவரது காலம் கிறித்துவுக்கு முந்தியதா அல்லது வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறுவது போல கி.பி. ஐந்தாம் நூற்றாண்டா என்ற கேள்வி எழுகிறது. எனினும் மணிமேகலை சிறைசெய் காதையில், "தெய்வம் தொழா அள்" என்ற பாடல் மேற்கோளாகக் கையாளப்படுவதால் அந்நூலுக்கு முந்திய நூல் என்று அனைவரும் ஒப்புக்கொள்வர். கிறித்துவுக்குப் பிந்தி வள்ளுவர் வாழ்ந்திருந்தால், அதுவும் மயிலாப்பூரில் குடியிருந்திருந்தால் தோமையார் என்ற கிறித்தவ அடியார் போதனையைப் பற்றிக் கேள்விப்பட்டு அவற்றில் சிலவற்றைத் தமது நூலில் மேற்கொண்டிருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், நம் ஆராய்ச்சிக்கு அத்தகைய கருத்துக்கள் ஒன்றும் தென்படவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லறம், அதில் விளங்கும் ஒழுக்கம், அன்பு, பொறுமை, ஈகை, ஒப்புரவு, விருந்தோம்பல், அடக்கம், நன்றியறிதல், பிறனில் விழையாமை முதலிய பண்புகள் அனைவரும் ஒப்புக்கொள்வன. துறவறத்திலும் இவ்வாறே சிறந்த கருத்துக்களை எடுத்தியம்புகிறார். அருள், தவம், வாய்மை, கள்ளாமை, வெகுளாமை, மெய்யுணர்வு, துறவு முதலியன அனைவராலும் பாராட்டத் தக்கவை.

பொருளதிகாரத்தில் அரசியலிலும் அங்கவியலிலும் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் பாராட்டி மேற்கொள்ளத் தக்கவை. ஒரு குலத்துக்கு ஒரு நீதியும், பிறப்பால் உயர்வு தாழ்வும் நிலவிய அக்காலத்தில் இத்தகைய நீதிநூலை இயற்றியது இடம், காலம் கடந்த அவரது பண்பட்ட உள்ளத்தைக் காட்டுகின்றது.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை'

என்று மன்னிப்பையும்,

'பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு'

என்று மனத்தாழ்ச்சியையும்,

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்றும்,

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்'

என்று அன்பையும் எடுத்துரைப்பது கிறித்துவமதச் சிறப்புக் கொள்கை போன்று தோன்றலாம் எனினும், அவை பண்பட்ட சான்றோர் பலருக்கும் உரிய பொதுப் பண்புகள் எனலாம். ஆனால், கொல்லாமை, புலால் மறுத்தல் முதலிய அதிகாரங்களில் அவர் சொல்லும் கருத்துக்கள் கிறித்துவ மதத்துக்கு முரண்பட்டவை. கிறித்துவ மதத்தில் இறைச்சி சாப்பிடக் கட்டளை இல்லை. ஆனால் அதை உண்டால் பாவம் என்று கூறுவது பொருந்தாது.

'உண்ணாமை யுள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா(து) அளறு'

என்பது கிறித்துவ மதத்துக்கு முரணானது.

கள்ளுண்பதும் அவ்வாறே, "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தலைவணங்க" என்பது கிறித்துவ ஒழுக்க விதி. குடியால் குடும்பத்தை சீர்குலைக்குக் கொண்டுவருவதும், மட்டுக்கு மிஞ்சி போதைவரக் குடிக்கிறதும் கண்டிக்கத் தக்கவை. ஆனால் மட்டோடு அதைப் பயன்படுத்துவோரை கிறித்துவ மதம் விலக்காது. திருக்குறளைப் படிக்கும் போது மறுபிறப்புக் கொள்கையை அவர் ஏற்கிறார் என்பது வெளிப்படும். பல இடங்களில் மறுபிறப்புபற்றிப் பேசுகிறார்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்'

என்றும்,

'அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து'

என்று கூறி, ஆசையே பிறப்புக்குக் காரணம் என்றும், அப்பிறவிக்கடலை நீந்த இறைவன் அடிசேர வேண்டும் என்றும் ஆசிரியர் கூறுகிறார். இது ஒரே பிறப்பு,ஒரே சாவு என்று கூறும் கிறித்துவக் கொள்கைக்கு நேர்முரணானது. மேலும், களவியல் பகுதியில் திருமணத்திற் நிகழும் புணர்ச்சி வாழ்க்கை நல்லொழுக்கத்துக்கு முரண்பட்டது. பொறுப்புள்ள பெற்றோர் எவரும் தம் பிள்ளைகள் இவ்வொழுக்கத்தில் ஈடுபட உடன்படார். சிறந்த அறத்துப்பாலை எழுதிய வள்ளுவர் இதை எவ்வாறு அதனோடு இணைத்தார் என்று சிலர் வியப்படைகின்றனர். ஊழ்வினை அல்லது தலைவிதி அல்லது கர்மம் போன்ற ஓர் ஆற்றல் மக்கள் வாழ்க்கையை ஆட்கொள்வது பற்றி வள்ளுவர் பேசுகிறார்.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'

என்று கூறி அதன் வல்லமையை வற்புறுத்துகிறார். இது கிறித்துவ மறைக்குப் புறம்பானது; முரணானது.

நிற்க. தற்போது 'தெய்நாட ம்' என்ற புலவர் 'திருவள்ளுவர் கிறித்தவர்' என்று கூறி, கிறித்துவத்துக்கு முரணாகத் தென்படும் பல குறளுக்குப் புதிய விளக்கம் கூறி வருகிறார். மேலும், 1.திருவள்ளுவர் கிறித்தவரா? 2.ஐந்தவித்தான் யார்?
3. வான் எது? 4. நீத்தார் யார்? 5.சான்றோர் யார்? எழு பிறப்பு?
7.மூவர் யார்? 8.அருட்செல்வம் யாது? என்ற பல நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் சிலவற்றை ஊன்றிப் படித்தும், அவர் வலியுறுத்தும் கருத்தை நம்மால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. 'திருவள்ளுவர் மறுபிறப்பை ஏற்கவில்லை' என்றும் 'ஐந்தவித்தான் என்பான் கிறித்து' என்றும், 'வான் என்பது பரிசுத்த ஆவி' என்றும், 'நீத்தார் என்ப கிறித்து பெருமானார்' என்றும், 'சான்றோர் என்பது கிறித்துவர்களைச் சுட்டுகின்றது' என்றும் பல சான்றுகளால் அவர் எடுத்துரைக்கிறார்.

இக்கருத்துக்களோ, அவற்றை மெய்ப்பிக்க அவர் கையாளும் பல சான்றுகளோ, நமக்கு மனநிறைவு அளிக்கவில்லை. கிறித்துவ மதத்துக்குரிய தனிச்சிறப்பான கொள்கை ஒன்றும் திருக்குறளில் காணப்படவில்லை. கிறித்து பெருமானின் பெயர் கூட வரவில்லை. ஆனால் இந்திரன் (25) திருமால், (அடியளந்தான் 610),அறவாழி 8, தாமரைக்கண்ணான் 1103) திருமகள்(செய்யவள் 167, செய்யாள் 84, தாமரையினாள் 617), மூதேவி (தவ்வை 167, மாமுகடி 617) அணங்கு (1081), பேய் (565) அலகை(850) கூற்று(376, 765,1050,1083; கூற்றம் 269, 1085) காமன்(1197), புத்தேள்(58,234,213,290,966,1323), இமையார்(906) தேவர் (1073) வானோர்(18,346) முதலிய இந்துமதத் தெய்வங்கள் சுட்டப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் புலவர் தெய்வநாயகம் விளக்கம் தர முயல்கிறார்.

உயர்திரு கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள் கருத்து:

திருநாமங்கள்

'அகர முதலஎழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்பதன் 'ஆதி' 'பகவன்' என்னும் பெயரை நோக்குவோம். இதனை ஒரு பெயராகவும் (ஆதியாகிய பகவன்), இரு பெயராகவும் (ஆதியும் பகவனும் ஆயவன்) கொள்ளலாம். சிவஞான சித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி (வைணவ) மதமறுதலையில் 'ஆதியாய் அருவுமாகி' என்ற செய்யுளாலும், 'பாஞ்சராத்திரி! நீ உன் கர்த்தாவை ஆதி என்று கூறினாய்; அங்ஙனம் ஆதியாயின் ஆதிக்கு முடிவின்றாய்க் கர்த்தாவும் அல்லனாவான்' என்ற அதன் உரையாலும் 'ஆதி' என்ற பெயர் திருமாலுக்கே உரியதாம். 'அந்தமில் ஆதியம்பகவன்' என்பர் நம்மாழ்வாரும்.

பகவன் அருளிய கீதை பகவற்கீதை, பகவன் வரலாறு கூறும் நூல் பாகவதம், பக அடியார்கள் பாகவதர்கள் என்னும் வழக்காறுகளால் பகவற்கீதை, பாகவதம், பாகவதர் என்னும் பெயர்கட்கு மூலமாகிய பகவன் என்ற சொல் திருமாலுக்கே உரிய பெயர் என்பது உறுதி.

'இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்'

என்னும் குறள்களில் 'இறைவன்' என்னும் சொல் உள்ளது. இறைவன் என்பதற்கு 'எல்லாப் பொருள்களிலும் தங்குகின்றவன்' என்பது பொருள். இது, நாராயணன், விஷ்ணு வாசுதேவன் என்னும் பெயர்களின் தமிழ் வடிவமாதலை உணரின் 'இறைவன்' என்ற சொல்லும் திருமாலுக்கே உரியதாம்.

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்'

இதில் காணப்பெறும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் பெயர் 'ரிஷிகேசன்' என்ற திருநாமத்தின் தமிழ் வடிவமாகும். ரிஷிகம், இந்தியம். இந்தி(ரி)யங்களின் தலைவன் என்னும் பொருளுடையது. 'அவித்தல்' என்பது ஈண்டுத் தன்வயமாக்குதல் என்னும் பொருளைத் தரும். ஓராயிரமாயுலகேழளிக்கும்-பேராயிரம் கொண்டதோர் பீடுடைய திருமாலுக்குச் சிறந்தனவாய திருநாமங்கள் 'பன்னிருநாமம்' எனப்படும். அவற்றுள் 'ரிஷிகேசன் என்பதொன்று. ஆதலின் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பதும் திருமாலுக்குரியதே.

'அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது'

இதனுள் வரும் 'அறவாழியந்தணன்' என்பதும் 'அறவனை ஆழிப் படை யந்தணனை' 'அறமுயல் ஆழிப் படையவன்' என்னும் திருவாய்மொழித் தொடர்களால் திருமாலுக்கே உரிய தென்றுணரலாம்.

'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

'எண்குணத்தான்-எளிமைக் குணமுடையவன்' இது இப்பொருளதாதலை;

'என்பதத்தால் ஓரா முறை செய்யா மன்னவன்' (548)

'எண்பதத்தால் எய்தல் எளிதென்ப' (991)

இவைகளில் இவற்றின் சொற்பொருளால் அறியலாம். 'எளிவரும் இயல்வினன்' யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்' எனவரும் திருவாய் மொழியின் உறுதியாம். மேலும் இறைவன் திருக்குணங்களுள் சௌலப்பிய குணம் (சுலபமுடைய குணம்) என்பதனை அடியார்கள் சிறப்பித்துக் கூறுவதும் இதனை வற்புறுத்தும்.

'தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணன் உலகு' (1191)

இதனுள் 'தாமரைக்கண்ணன்' என்ற பெயர் திருமாலுக்கன்றி வேறு எத்தெய்வத்துக்கும் இல்லாமை உய்த்தறியத் தக்கது.

2. பிறவிகள் (அவதாரங்கள்)

திருக்குறளில் சுட்டப்படுவன மூன்று அவதாரங்களே. நீதியை உரைக்க வந்த திருக்குறளில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இவற்றைக் காட்டியுள்ளதை நோக்கின் திருவள்ளுவரின் சமயம் இன்னதென்பதனை உணரலாம். திருமால் இராமாவதாரத்தில் மனிதன் 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' முறையைத் தாமே நடத்திக் காட்டினர். அங்ஙனம் நடந்து காட்டிய ஒழுக்கநெறி ஒன்று. கிருஷ்ணாவதாரத்தில், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் எங்ஙனம்? என்பதனை உபதேச (பகவத்கீதை) வாயிலாகச் சொன்ன ஒழுக்கநெறி மற்றொன்று. இராமனாக வந்து நடந்து காட்டியருளிய ஒழுக்கநெறி எனவும் கண்ணனாக வந்து சொல்லியருளிய ஒழுக்கநெறி எனவும் இரட்டுற மொழிதல் எனும் உத்தி வகையால்,

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்' (6)

எனும் இதனில் திருமாலின் இரண்டாவதாரத்தையும் சுட்டுதல் அறியலாம்.

கிருஷ்ணாவதாரத்தில், துரியோதனிடம் 'படையெடேன் அமரில் எனப் பகர்ந்த'தை மீறி, வீடுமன் விருப்பிற்கிணங்க அவன் நடத்திய போரில் 'ஆன தெனக்கினியாக எனத்தனியா யெடுத்த'மையும் பொய்யே அறியாத தருமனை 'அசுவத்தாமன் எனும் யானை இறந்தது' எனத் துரோணன் செவிபடச் சொல்லச் செய்து, அதற்குத் துரோணன் வேறுபொருள் கொள்ளுமாறு மயங்கச் செய்தமையும், பிறந்தபொழுதே இறந்த நிலையில் இருந்த பரிட்சித்து, பெண்களை நோக்காத பேராண்மையுடையோன் ஒருவன் திருவடிபடில் உய்வான் எனக் கண்ணபிரான் உரைக்க, அந்நிலையில் யாவரும் முன்வாராமைகண்டு, 'யானே பெண்களை நோக்காதவன்' எனத் தன் திருவடியைப் பதியவைத்து அவனை பிழைக்கச் செய்தமையும் முதலாய வரலாறுகளை மனத்துக் கொண்டே,

'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்'

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

என்ற திருக்குறள்களைக் கூறினர் எனக் கொள்ளலாம். 'புரை தீர்ந்த நன்மையைப் பொய்மை பயவாது, அங்ஙனம் பயந்தின் அப்பொய்மையும் வாய்மையிடத்த' என்று கூறவந்தது கண்ணபிரான் வரலாற்றை நோக்கியே என்க.

'இராமாவதாரத்தில் மெய்யும் கிருஷ்ணாவதாரத்தில் பொய்யும் நமக்குத் தஞ்சம்' எனும் ஆன்றோர் வாக்கும் இதனை அரண் செய்யும்.

திருமால் திருக்குறளப்பகுதிப் பின் 'மண்முழுதுமகப்படுத்து நின்ற' பேருருவத்தைத் 'திரிவிக்கிரமன்' என்பர். விக்கிரமம் பெருவலி, திரிவிக்கிரமம் மூவகைப் பெருவலி, முதலாவது உலகளந்தது; அடுத்தது விண்ணளந்தது; மூன்றாவது -மாவலிதலையில் தன் திருவடியை வைத்து அவனைப் பாதலத்தில் ஆழ்த்தியது. எனவே, இவ்வகையான வகை வலியையும் காட்டுதற்காகவே 'உலகளந்தான்' எனக் கூறுது, 'தன்னடியளவானே எல்லா உலகங்களையும் இறைவன் அளந்தான் எனப் பொருள் கொள்ளுமாறு,

'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு' (610)

என விளக்கிய நுட்பம் உணர தக்கது.

'முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்' (பெரிய திரு 9-4:2)

எனும் திருமங்கை மன்னன் பாசுரம் உணர்க.
எனவே, இராமன், கண்ணன், வாமனன் எனும் மூன்றவதாரங்களையும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டுகின்றார் எனக் கொள்ளலாம்.

3. நித்திய விபூதி லீலா விபூதி என்னும் இருவகை உலகுக்கும் தலைவன் திருமாலே.

நாம் வாழும் உலகு மண்ணுலகு. வானவர்வாழும் உலகு வானுலகு. கீழோர் வாழ்கின்ற உலகு 'இருள்சேர்ந்த இன்னா உலகு' 'அளறு' 'ஆரிருள்' எனப்படும் கீழுலகு. இவையாவும் மக்கள் பிறவிச் சுழலில் சுழலும் விளையாட்டுலகம் எனவும் இறைவனுடைய விளையாட்டுலகம் எனவும் பொருள்படுமாறு இவ்வனைத்துலகையும் 'லீலாவிபூதி' என்பர். எம்பெருமானும் அவனடியார்களும் நித்தியமாய் இன்பத்தோடு வாழும் உலகு முத்தியுலகு. இதனை 'நித்திய விபூதி' என்பர். இவ்வாறு கூறுவது வைணவ மரபு. இவ்விருவகை உலகிற்கும் தலைவன் திருமாலே என்பதைக் குறிக்கத் திருமாலை 'உபய விபூதி நாதன்' என்பர் ஆன்றோர்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு' (1)

'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு' (610)

எனும் இரு குறள்களால் இவ்வுலகிற்கு அவனே தலைவன் என்பதனை விளக்கினார்.

'தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு' (1191)

எனும் குறளால், முற்றும் துறந்தார் எய்தும் தாமரைக் கண்ணனுடைய (முத்தி) உலகு' எனக் குறித்தலால், 'அந்தமில் இன்பத் தழிவில் வீடு' 'நலமந்தமில்லதோர் நாடு' 'வானோர்க்குயர்ந்த உலகு' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறும் நித்திய விபூதிக்கும் திருமாலே தலைவன் என்பதனைக் கூறினார். எனவே 'உபய விபூதிநாயகன்' திருமாலே எனக் கூறினாராயிற்று.

இம்முக்தியுலகிற் சென்றவரை 'புனை கொடுக்கிலும் போத ஒட்டார்' என்றபடி அவ்வுலகிலேயே நிலைபெறுவரன்றி ஈண்டுத் திரும்ப வாரார் என்பதும் வைணவ சமயக் கோட்பாடு. இதனை,

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" (356)

என்று விளக்கினார் என்பது உள்ளுதல் தகும்.

மதுரைப் பல்கலைக் கழகம்.

திருக்குறள் ஆய்வகம்.

1.2.1976: கட்டுரை: ஏ.வி.ஜயசந்திரன், மதுரை.

****

பிரம்ம சூத்திரம், உபநிடதம், கீதை போன்று காலம் கடந்து நிற்கும் ஒரு நூல் வள்ளுவரின் திருக்குறள். பிரம்ம சூத்திரம், உபநிடதம், கீதை இம்மூன்று நூற்களுக்கும் வெவ்வேறு பொருள் கண்டு மூன்று மெய்ப்பாட்டியல் கொள்கைகளான அத்வைதம், வசிஷ்டாத்வைதம், த்வைதம் என்பனவற்றைத் தோற்றுவித்தனர் சங்கரர், இராமானுசர், மாத்துவர் போன்ற சமயத் தலைவர்கள். அதேபோல் வள்ளுவத்திலும் பல சமயக் கருத்துக்கள் பரவியிருப்பதைக் கண்டு குறள் தங்கள் சமயக் கருத்துக்களை அறிவிக்கின்றது எனப் பலர் வள்ளுவத்தைத் தமதுடைமையாக்கிக் கொள்கின்றனர். வள்ளுவர் தமிழகத்தில் விளங்கினவும், தொல்காப்பியரால் எடுத்துக்காட்டப்பட்டனவுமான பழந்தமிழ்ச் சமயத்தினையே குறிப்பிடுகிறது என்பதனை ஈங்கு ஆய்வு செய்வோம்.

தொல்காப்பியத்தில் இரண்டு இறைக் கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டன. அவை யிரண்டும் "கடவுள்", "தெய்வம்" என்பனவாகும்: கடவுள் பொறி, புலன், குணம் முதலியன கடந்து நிற்பது. அப்பரம் பொருளை வழிபடுமுறை மந்திரத்தினை ஓதுதல்.

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழிதானே மந்திரம் என்ப" என்பதன்

அடிப்படையாக எழுந்த மறை மொழி ஓதி அருபியாக விளங்கும் பரம் பொருளை வணங்குவது ஒருமுறை.

மற்றொன்று தெய்வமெனப்படுவது. தோற்றப் பொலிவும், குணங்களும் கொண்டது. இது வழிபாடுவதற்குரியது. திலைதோறும் நின்று வழிபடும் பொருளாவது.

"வழிபடும் தெய்வம் நின்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்"

வழிவடுவதற்கென ஏற்பட்டதுதான் தெய்வம். அதனை வழிபட்டுப் பேறு அடைதல் என்பது மற்றொரு முறை.

முதலாவதான கடவுளை, முதல் குறளில் சுட்டப்பட்டது. மந்திரத்தின் அச்சாணியாகியது ஒலி. மந்திரத்திற்கெல்லாம் நாயகமாக விளங்குவது ஓங்காரம். இதனின் உயிர் அ, உ என்ற மூல ஒலிகள். இந்த ஒலியுடன் ஆதிபகவன் உலகில் நீக்கமற நிறைந்துள்ளான் என்ற கருத்து மேம்பட்டு நிற்கிறது.

தெய்வக் கொள்கையோ வாழ்க்கை சிறந்து பொலிவதற்காக ஏற்பட்டது. அதில் மூன்று பகுதிகள். ஒன்று இறைவன், இரண்டாவது வழிபாட்டு முறை, மூன்றாவது கிடைக்கும் பலன். கிடைக்கின்ற பலனைக் கருதியே

---2

நாம் இறைவனை வழிபடுகிறோம். தெய்வத்தை புறத்தே நிறுத்தி வழிபடுதல் தொல்காப்பியம் காட்டும் பழந்தமிழ் நெறி. இந்தத் தெய்வம் காரிய வெற்றிக்கு ஏதுவாக நிற்பது. நாம் வழிபாட்டில் எதிர்பார்க்கும் பயன்களை முதல் அதிகாரம் கூறுகிறது. அவையாவன:

1. கற்றதனாலாய பயன் பெறுவது 2. நிலமிசை நீடுவாழ்வது 3. இடும்பையிலாது இருப்பது. 4. இருவினையும் சேராது விடுபடுவது. 5. நீடு வாழ்வது, அல்லது அமரத்துவம் பெறுவது 6. மனக்கவலை மாற்றுவது. 7. பிறவாழி நீத்தல். 8. பொறி புலன்களை நன்முக இயங்கச் செய்வது. 9. பிறவிக் கடல் நீந்துவது.

<u>இறைவனின் இலக்கணம்</u>:

1. அவனை வாலறிவன் என்றும், 2. மலர்மிசை ஏகினன் என்றும், 3. வேண்டுதல் வேண்டாமை இலான் என்றும். 4. இருவினை சேரா இறைவன் என்றும், 5. பொறிவாயில் ஐந்தவித்தான் என்றும், 6. தனக்குவமை இலான் என்றும், 7. அறவாழி அந்தணன் என்றும், 8. எண்குணத்தோன் என்றும் கூறப்பட்டது.

இறைவனை வணங்கும் வழியும் கூறப்பட்டுள்ளது. "தாள்" என்ற சொல்லிற்கு முயற்சி என்ற பொருளில் நான்கிடங்களில் தாள் என்ற சொல்லை பயன்படுத்தப்பட்டுள்ளது. வாலறிவன் நற்றாள், தனக்குவமையிலாதான் தாள், அறவாழி அந்தணன் தாள், எண்குணத்தான் தாள் என்ற நான்குமாகும்.

<u>கேள்வி</u> என்பது முதல் முயற்சி. இரண்டாம் குறளில் இது சுட்டப்பட்டது. கல்வியினும் சிறந்தது கேள்வி. அதற்கே ஒரு அதிகாரம் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது வழி <u>சிந்தித்தல்</u>. மனக்கவலை நீக்குவதற்கு சிந்தனை தேவைப் படுகிறது. தனக்கென உவமை இல்லாதானை ஆய்ந்து காண இது ஒரு சாதனையாக விளங்குகிறது.

மூன்றாவது மார்க்கம் <u>தெளிதல்</u> பிறவாழி என்ற இடத்து புலன் இன்பத்தினையும், அதனை ஒழிக்கக் காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றிலிருந்து விடுபடுவது நெறியெனவும், விளக்கப்பட்டது. இந்தத் தெளிவு பெறுதலே மார்க்கமாக சுட்டிக்காட்டப்பட்டது.

நான்காவது சாதனை. <u>நிட்டை</u> பொறிவாயிலினை பயனில்லாப் பொருள்களில் ஈடுபடுத்தாது சிறப்பெனும் செம்பொருள் காண்பதற்கு (358) திருப்புதல். இது ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் என்ற அடிகளால் விளக்கப்பட்டது. (357).

அப்படி இந்நான்கு வழிகளில் நின்று பக்குவம் பெற்றோர் சில நிலைகளை அடைவர் என்பது குறித்துக் காட்டப்பட்டது.

...3

மலரினைப் போன்று மணம் பெறுதல்(3) நெறி நின்றோர் பக்குபமடைந்த மாட்டு மலராவது போன்றும், அதனின்று வெளிப்படும் நறுமணம் போன்று அவர்களின் இறைத்தன்மை விளங்கும்.

வேண்டாமை என்பது பெருஞ்செல்வமாக அவர் அடைவர். (363).

பக்குவம் பெற்றவுடனே அவர்களுக்கு பற்றற்ற நிலை ஏற்படும். (350) இதனால் அவர்கள் பிறவிக் கடலை நீந்துவர்.

இதைத் தவிர பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் அமரத்துவம் பெறுவர் என்பது ஆறுவது குறளில் வற்புறுத்தப்பட்டது. தொல்காப்பியர் "பழிதீர் செல்வமொடு" என்பது ஈண்டு ஆராயத்தக்கது.

குறள் மற்றொரு தமிழ் நெறியினைச் சுட்டிக் காட்டுகிறது. அது இறைவனை பொருள் சேர்ந்த புகழ் பாக்களால் பாடுவதாகும். தொல்காப்பியத்தில் வாழ்த்தும் வகையும், வாழ்த்தப்படுவோரும் குறிக்கப் பட்டுளது. தனக்குப்பயன் படவும் படர்க்கைப் பொருட்டுப் பயன்படவுமே வாழ்த்த அமைந்ததென நச்சினார்க்கினியார் உரை வகுத்துள்ளார்.

ஆக தமிழ் மக்கள் வகுத்துக் கொண்ட தமிழ் சமயத்தினையே வள்ளுவர் தனது கடவுள் வாழ்த்து அதிகாரத்துள்ளும் பிற அதிகாரங்களிலும் சுட்டியுள்ளார் என்று கொள்வதே சாலச் சிறந்ததெனப் படுகிறது.

பேராசிரியர் கோ. வடிவேலு செட்டியார் கருத்து

இவரைச் சைவரென்றும், வைணவரென்றும், அத்வைதியென்றும், பௌத்தரென்றும் சமணரென்றும், கிறிஸ்தவரென்றும் அவ்வவ்வகுப்பினர் கூறுகின்றனர்.

சைவர், வைணவர், அத்வைதிகள் என்பார் மூவரும் ஒத்துக் கொண்டுள்ள வேள்வியை இவர் "அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற, னுயிர் செகுத் துண்ணாமை நன்று" என்றும், "செவியுணவிற் கேள்வியுடையாரவியுணவி, னான்றாரோ டொப்பர் நிலத்து" என்றும் சிறப்பித்துடம் பட்டுக் கூறுதலினும், பௌத்தர்-சமணர் கிறிஸ்தவர்கள் அதனைப் பல்லாற்றானும் இழித்துக் கூறுதலினும், இவரது மதம் வைதிகமதமேயாம். வேதவழித்தாய மதம் வைதிகமதமாம். "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" என்னும் குறளாலும் பிறவாற்றானும் இவர் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வாதியென்பது செவ்வனே விளக்கமாம். இவர் உலகிற்குக் காரணம் ஆதிபகவன் என்று கூறியிருத்தலால், சாங்கிய ராதியோருமாகார். சாங்கிய ராதியோர் கடவுளை யொப்பாது வேதத்தினைப் பிரமாணமெனக் கொண்டமையின் அவர்கள் வைதிக நாஸ்திகராவர். உலகிற்குக் காரணம் கடவுளென்பதை யொப்பாத பௌத்தரும் சமணரும் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என்று உலகிற்குக் காரணம் கடவுளென்று கூறிய நாயனாரைத் தத்தம் மதத்தினரென்று கூறுவதும், மறுபிறப்பையும் புலாலுண்ணாமையையு மொப்பாத கிறிஸ்தவர் மறுபிறப்பையும் புலாலுண்ணாமையையுமொப்பிய நாயனாரைத் தமது மதத்தினரென் றுரைப்பதும் வியப்பேயாம்.

நாயனாரை வைதிகமதத்தின ரென்று கூறுவதற்குத் திருக்குறளில் தக்கவேதுக்கள் வெளிப்படையா யிருத்தல்போல, சைவரென்றாவது வைணவரென்றாவது அத்வைதியென்றாவது குறிப்பிட்டுரைப்பதற்குத் தக்கவேதுக்கள் வெளிப்படையாயின்மையின், இவரை அவருள் ஒருவரெனக் குறிப்பிட்டுரைத்தலியலாது.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கருத்து

பெயர்:

திருவள்ளுவரைச் சமணரென்று பழைய நாளிலிருந்து பலர் கூறிவருகின்றனர். தேவர் என இவர்க்கு வழங்கும் பெயர் சமணப் பெயரே என்பர். நாயனாரென்ற பிற்காலத்து வழங்கிய பெயரும் சமணர்கள் கொள்ளும் ஒரு பட்டமேயாம் என்றும் காட்டுவர் சிலர். ஆனால் திருமாளிகைத்தேவர், திருநீலகண்ட நாயனார் முதலிய சைவப் பெயர்களைக் காண்க. இது பிற்கால வழக்கே ஆனாலும் பிற மதத்தினரும் இந்தப் பெயர்களை வழங்கினர் எனல் வேண்டும். நீலகேசி என்ற சமண நூலுக்கு உரை எழுதிய சமண திவாகரமுனிவர் திருக்குறளை "எமது ஓத்து" என்று கூறுவர். ஆனால், இதனைப் பொதுமறை எனப் பலரும் கூறிவருவதனை மறத்தலாகாது. அளறு, இருள், அண்ணாத்தல் செய்யாதளறு முதலிய நரகங்களையும் சமணர் கூறுவது போலத் திருவள்ளுவரும் கூறுவர். (1) ஓர்ப்பு என்ற சொல் வழக்கு (2) உரையாசிரியர்கள் கூறும் அவசர்ப்பிணி முதலான காலப்பாகுபாடு (3) பரதர் சமுதாயத்தை அமைத்ததனை உலகியற்றியான் என்ற திருக்குறள் கூறல் முதலிய சமண வழக்குகள் திருவள்ளுவரைச் சமணர் என்றே நிலைநாட்டும் என்பர். இவற்றைச் சமண வழக்காக எல்லா உரையாசிரியரும் ஒப்புக்கொண்டு உரைகாண இல்லை.

கொள்கைகள்:

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்ற குறள் வைதிக மார்க்கத்தைப் பழிக்கின்ற தென்பர். ஏறக்குறைய இதே கருத்துடைய பாட்டொன்று மனுஸ்மிருதியிலும் (5-ஆம் ருத்)வருகிறது. "தினற் பொருட்டாற் கொல்லா துலகெனின்-யாரும் விலைப் பொருட்டா லூன் தருவா ரில்" என்ற குறள் பௌத்தர்களை மறுத்துரைக்கும் சமணவாதம் என்று கூறுவதில் உண்மையில்லாமற் போகவில்லை. ஆனால், புத்தர்களும் கொலையையும் புலாலையும் வெறுப்போரே என்பது மணிமேகலையில் வரும் சாதுவன் கதையால் விளங்கும். புலாலுணவிற் பழகியவர்க்கு அப்பழக்கத்தை விடமுடியாத நிலையில் இரங்கிக் கூறியவற்றைப் புத்தமதத்தின் அடிப்படைக் கொள்கை என்று கொள்ளலாகாது.

அஹிம்சை அடிப்படை:

ஆதலின், பௌத்தர்களும் சமணர்களும் வற்புறுத்திய அருட்கொள்கையின் அடிப்படையில் இந்திய நாடு முழுதுமே செல்லத் தொடங்கியது. அஹிம்சையின் அடிப்படையில் இல்லறமும் துறவறமும் சமுதாய வாழ்வும் அரசியல் வாழ்வும் காதலர் வாழ்வும் சென்று முற்றி, வீட்டுலகப் பேரின்பம் பெருவாழ்வாக மலரு மென்பதனைத் திருவள்ளுவர் போல் காட்டினார் வேறு ஒருவருமில்லை.

தொல்காப்பியத்தில் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் என வருவது போலத் திருக்குறளிலும் பொறிவாயிலைந்தவித்தான் என வருகிறது. கடவுள் வாழ்த்தில் வரும் பல தொடர்கள் சமண நூலில் கண்டவை எனலாம். என்றாலும், அவற்றை அருகர் என ஒரு தலையாகத் துணியும் வகையில் கூறாமல் பொதுநெறியில் கூறியிருப்பது வள்ளுவரது பொதுநோக்கையே வற்புறுத்துகின்றது எனலாம்.

புதுமையும் பொதுமையும்:

இப்படி ஒரு நூல் எந்த மதத்திலும் எழுந்ததாக நாம் அறியவில்லை. அஹிம்ஸா தர்மத்தின் அடிப்படையில் எழுந்ததோர் வாழ்வின் விளக்கமென இந்நூலைக் கூறலாம். அந்த வகையில் தூய சமண வாழ்வு இங்கு விளங்குகிறது எனக் கூறுதல் கூடும். ஆனால், பௌத்த தர்மத்தின் அடிப்படையும் பிறநெறிகளின் அடிப்படையும் இங்கு விளங்காமல் இல்லை. சமணரா யிருந்தாலும் சமணரென்று வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு பிறரினும் தாம் வேறென வாழ முனைந்த சமணரல்லர் வள்ளுவர். கல்லாடம் கூறுவது போலச் "சமயக் கணக்கர் தம்வழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது" என்ற புலவர் பெருமானவர் இவர். சமணக் கொள்கையின் அடிப்படை தமிழ் நாட்டிற் பரவி வேரூன்றிய காலத்தில்தான் வள்ளுவர் தம் நூலை எழுதியிருத்தல் கூடும். அந்த அடிப்படை உலக வாழ்வின் பலதுறைகளிலும் எவ்வாறு பூத்துக் காய்த்து இனிக்குமென எண்ணிப் பார்த்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம். அவர் நூலின் பெருமை காந்தியுலகத்தில் தான் நன்கு விளங்கி வருகிறது. அவர் கூறியன எல்லாம் சமணக் கொள்கை என்று வாதாடுவதை விட, எல்லோரும் ஒப்பும் வகையில் அச்சமணக் கொள்கையின் அடிப்படையை எடுத்து விளக்கிய பெரியவர் என வரவேற்பதே தக்கதாம். வள்ளுவர் கூறுவது சமணமானால் அத்தகைய பொது நெறியாக விளங்கும் சமணத்தையே உலகம் வரவேற்கும். ஒவ்வொரு மதத்தினரும் "தம்முடைய நூல் தம்முடைய நூல்" என இதனை வரவேற்பது உலகில் வேறெங்கும் நாம் காணாத புதுமைக் காட்சியாம். அத்தகைய நூலைப் பிற சமணர் கூறும் சமணத்தையே வற்புறுத்துவதாக எப்படிக் கூறமுடியும்?

TIRUVALLUVAR'S CONCEPTION OF GODHEAD: K.APPADURAI

The first chapter of Tirukkural is entitled invocation of God and the first couplet thereof invokes Ati Pakavan. It is quite natural for any one to take Ati Pakavan as equivalent to God and many of the recent commentators and annotators easily paraphrased Ati Pakavan as God who is the First cause. But while ancient commentators left it at that, they most evidently had some compunction in the matter and simply paraphrased Ati Pakavan as Ati Pakavan. The reaspn for their hesitation is easy to see- Tiruvalluvar never again uses this word to refer to God.

Some people have taken courage to see in Ati Pakavan the names of Tiruvalluvar's imaginary parents. For this of course they have absolutely no other warrant but their fertile imagination.

Some wish to paraphrase it as the sun, the Source of all. But here also there is only a slight shade of fancy (the Sun praised before Rain in the next, chapter). Yet others take it to denote Basic or Sovereign Reason. When the following couplets praise God, there is no reason why the auther should go out of the way to avoid it to mention Reason or the Sun.

The only possible solution is that Ati Pakavam does not verbally mean God but yet is used as equivalent to God. It may be Tiruvalluvar's direct Master or Teacher, or a World Master or World Teacher to whom he wishes to pay his homage as he is to all intents and purposes a Visible God and a Symbol personal of the Impersonal Godhead.

If this is so, Ati Pakavan is the prototype of the World tradition that came to be knownas Messiah or christ or the Prophet in west Asia, Tirthankara and Bodhisatya among the ancient Buddibists and Jains, World Teacher (Jagadguru) in sanskrit schools of south India, Nayanar (Master) and Alwar (Devotee) among the saivas and vaishnavas. This again agrees with the general conclusions of our study that Tiruvalluvar is the progenitor of the line of spiritual Thoughts and Institutions all over the civilised world.

Tiruvalluvar's idea of Godhead is connected with a Real Christlil person and through him with all Life, as is shown in the chapter on the Three-fold Path which follows,

****

So a natural and ethical world and life affirmation of this kind was present among the people of India at the beginning of our era, although nothing of it can be found in Brahmanism, Buddhism and Bhagavad-Gita Hinduism. It gradually penetrates into Hindu thought through the great religious teachers who had sprung from the lower casters and lived among and felt with the people.

— ALBERT SCHWEITZER-

பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் கருத்து:

சைவத்தின் தனிச்சிறப்புகளாக இருப்பனவற்றுள் எவை திருக்குறளில் இடம் பெறுவனவாக எனக்குத் தோன்றுகின்றனவோ அவற்றைப் பற்றி மட்டுமே இங்கு நான் குறிப்பிடுதல் முறையாகும்-சாலும்.

1.திருவள்ளுவர் கடவுள் என்ற ஒரு பொருளை நம்புகிறார்; இந்த நம்பிக்கை சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இல்லை.

2.திருவள்ளுவர் ஒவ்வொரு உயிரும் செய்யும் வினைக்கேற்ற விளைவுகளை அந்தந்த உயிருக்கு ஆண்டவன் கூட்டி வைக்கின்றார் என நம்புகிறார். இந்த நம்பிக்கை சமணத்திற்கும் பௌத்த்திற்கும் இல்லை.

3.திருவள்ளுவர் பிறப்புகளை நம்புகிறார். இதில் கிறிஸ்துவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் உடன்பாடில்லை.

4.திருவள்ளுவர் உலகு, உயிர், அறியாமை (மாயை) ஆகிய பொருள்களின் மெய்ம்மையை(Truth)நம்புகிறார். ஆனால், அத்வைதத்தின் நிலை இதற்கு மாறானது (அத்வைதிகள் ஆன்மிகப் பயிற்சி (சாதன நிலை) நிலையில் இவற்றின் உண்மைகளை உடன்பட்டும் பேறுநிலையில் (சாத்திய நிலை) உடன்படுவதில்லை. ஆனால் திருவள்ளுவர் இரு நிலைகளிலும் உடன்படுகிறார் எனலாம் .

5.உயிர்கள் எண்ணில என்பதைக் கடவுள் வாழ்த்தில் வரும் 'குணமிலவே' என்ற பன்மை வழக்கு உறுதிப்படுத்தும்.

6.சைவத்திற்கும் வைணவத்திற்கும் சித்தாந்த அடிப்படையிலேயே வேறுபாடுகள் மிகக் குறைவு.

இந்த நிலையில் திருவள்ளுவரின் உள்ளார்ந்த சமயச் சார்பு சைவமா?வைணவமா? என்று கண்டுபிடிப்பதில் பெருஞ் சிக்கல் இருப்பது போலத் தோன்றும். ஆனால் இரண்டே இரண்டு காரணங்களினால் இந்தச் சிக்கலைத் தீர்த்துவிடலாம். ஒன்று எண்குணத்தான் என்று திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் சொல்வது சைவ ஆகமங்களின் அடிப்படையிலே என்பதை பரம வைணவராகிய பரிமேலழகரே ஒப்புக் கொண்டுள்ளார். இரண்டாவது திருமாலைப் பற்றித் திருக்குறளில் வரும் இரண்டு இடங்களும் கூர்ந்து நோக்கின் கீர்த்தி உடையனவாகத் தெரியவில்லை.

இந்த நீக்குதல் முறையால் (Elimination process)முதற்கண் திருவள்ளுவரின் உள்ளார்ந்த சமயச் சார்பு சைவமே என்று உறுதிப்படுத்தலாம். இனி,

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

முதலான குறளைக் கொண்டு திருவள்ளுவரின் சமயம் சைவமே என்பதைத் திரு.க.வச்சிரவேல் முதலியார் தமது 'திருக்குறளில் உட்கிடை சைவ சித்தாந்தமே' என்னும் சிறந்த நூலால் தெளிவுபடுத்துதல் கற்றுணரத்தக்கது.

1. முன்னுரை: வள்ளுவர் எச்சமயத்தைச் சேர்ந்தவர் என்பது இடைக்காலத்திலிருந்தே பலவாறு ஆயப்பட்டு வரும் பொருளாகும். வள்ளுவர் சமணசமயத்தவர் எனவும் பௌத்த சமயத்தவர் எனவும் வைதிக சமயத்தவர் எனவும் வைதிக சமயத்துள்ளும் சைவப்பிரிவை வைணவப் பிரிவை அல்லது வேதாந்தப் பிரிவைச் சேர்ந்தவரென்றும் பலர் பலவாறு கூறுவர். தற்காலத்தில் வள்ளுவர் கிருஸ்தவரே எனக்கூறுவாரும் உளர்.

இக்கருத்துக்களுள் வள்ளுவர் சமணசமயத்தைச் சேர்ந்தவர் என்றும் கருத்தும் சைவசமயத்தைச் சேர்ந்தவர் என்றும் கருத்துமே பலரால் பின்பற்றப்பட்டன எனத் தோன்றும். இடைக்காலத்தில் திருக்குறளுக்கு உரையெழுதிய பன்னிருவருள்ளும் சிலர் சைவ சமயச்சார்பாகவும் சிலர் சமண சமயச்சார்பாகவும் எழுதியுள்ளனர். தற்போது கிடைக்கப் பெறததாகிய தர்மர் உரை சமண சமயச் சார்பாயதே என்றும் தற்போது கிடைத்துள்ள, திருசக்கரவர்த்தியால் வெளியிடப்பட்ட கவிராஜ பண்டிதர் உரை தருமருரையைத் தழுவி யெழுதப்பட்டதே என்றும் அந்நூலின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. பரிதியார் உரையும் ஓரளவாவது சமண சமயக் கருத்துக்களைத் தழுவியதாகவே காணப்படுகிறது. பரிமேலழகர் சைவ சமயக் கருத்துக்களைத் தழுவி யெழுதினர் என்பதையாவரும் அறிவர். 'மலர்மிசையேகினான்' என்ற தொடருக்கு உரை கூறுங்கால் 'இதனைப் பூமேல் நடந்தான் என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாருமுளர்' (குறள் 3) எனப்பரிமேலழகர் கூறுவதனால் வள்ளுவர் சமண சமயத்தவர் என்ற கட்சி அவர் காலத்தின் முன்பே ஓரளவு வலுப்பெற்றிருந்ததென அறியலாம்.

2. சமணம் பற்றி: வள்ளுவர் சமண சமயத்தவர் எனக் கூறுவோர் கருத்தையாராயின் அவையாவன: சமண சமயத்தில் முழு முதற் கடவுள் ஒருவரில்லை. தீர்த்தங்கரர் எனப்படும் சமயத்தலைவர்கள் இருபத்து நால்வரையே அவர்கள் வணங்குவர். இவர்களில் முதல்வராய இடபதேவரையே வள்ளுவர் ஆதிபகவன் எனக்குறிப்பிட்டார் எனவும் அவ்விடபதேவரே உழவு வாணிகம் ஆகியதொழில்களை மக்கட்குக் கற்றுக் கொடுத்தனால் 'முதற்றே உலகு' எனக் கூறப்பட்டதெனவும் கொள்வர். வாலறிவனும் அவரே என்பர். மலர் மிசை யேகினான் சிறப்பாக அவரையே குறிக்கும் என விளக்குவர். வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், தனக்குவமையில்லாதான் என்பன ஒரு சிறந்த பற்றற்ற சமயத்தலைவற்கும் பொருந்துவனவே. பொறிவாயிலைந்தவித்தான் என்னும் தொடரும் மண்ணுலகில் வாழ்ந்த சமயத்தலைவனொருவனுக்கே ஏற்றதாகும். அறவாழி அந்தணன், தர்ம சக்கரத்தையுடைய அந்தணனே என்றும் எண்குணத்தோன் என்பது அனந்த ஞானம் முதலிய எண் குணங்களைக் குறிக்கும் என்றும் இவர் கூறுவர்.

மேலும் சமணர் அர்ஹந்த, சித்த, சாது, தர்ம என்றும் நான்கையும் உலகில் உத்தமமானதாகக் கொண்டு இவற்றில் சரணமடைவர். இவற்றில் 'அர்ஹந்த சித்த' என்பன கடவுள் வாழ்த்திலும் 'சாது' நீத்தார் பெருமையிலும் 'தர்ம' அறன்வலியுறுத்தலிலும் கூறப்பட்டன என்பர்.

வள்ளுவரின் அறக் கருத்துக்களும் பலவும் சமண சமய அறக்கருத்துக்களுடன் பொருந்துவனவே. சிறப்பாக உயிர்க் கொலையையும் உயிர்கட்குத் துன்பம் செய்தலையும் விலக்கும் கொல்லாமை, இன்னா செய்யாமை, புலால் மறுத்தல் என்றும் அதிகாரங்கள் சமணர்தம் அறக்கருத்துக்களை ஏற்று எழுதப்பட்டனவே எனலாம்.

அவி சொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று (259)

என்ற குறள் வைதிக சமயத்தை மறுத்துச் சமண சமயத்தை ஆதரிப்பதாகக் கொள்வர்.

3. <u>பௌத்தம்பற்றி:</u> மேற் கூறப்பட்ட சான்றுகளிற் சில பௌத்த சமயத்திற்கும் பொருந்தும். புத்தரும் துறவு பூண்டு பற்றற்றவரேயாதலால் 'வேண்டுதல் வேண்டாமையிலான்' 'ஐந்தவித்தான்' என்பன அவர்க்குப் பொருந்துவனவே. தருமத்தைச் சக்கரமாக உருவகித்தல் பௌத்த சமயத்திலும் உள்ள வழக்கே. பௌத்தப் பேரரசரான அசோகரும் சக்கரத்தைத் தமக்கு அடையாளமாகக் கொண்டார். புத்தரைப் பின்பற்றுவோர்க்கு அவர் 'தனக்குவமையில்லாதவரே'. இறைவன் என்றும் சொல்லும் அவரவர் தாம் வழிபடுதெய்வத்தைக் குறிக்கும் சொல்லே. புத்தரையும் பகவான் எனக்கூறும் வழக்கு உண்டு. எண்குணம் என்பது புத்தரால் கற்பிக்கப்பட்ட 'நற்காட்சி, நல் வாய்மை முதலிய எட்டு உறுப்புக்களையுடைய அட்டாங்க மார்க்கத்தைக் குறிப்பதாகவும் கொள்ளுதல் கூடும். பௌத்த சமயத்தோரும் அறவோரையும் அறத்தையும் போற்றுவோரே, கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை அறன் வலியுறுத்தல் என்பன பௌத்தர் தம் மும்மணிகளாகிய புத்தர், சங்கம், தர்மம் என்பனவற்றைக் குறிப்பதாகக் கருதப்படலும் கூடுமல்லவா?

பௌத்த சமயத்தவர் அறக்கருத்துக்கட்கும் திருக்குறளில் கூறப்பட்ட அறக் கருத்துக்கட்கும் அதிக ஒற்றுமையுண்டு. காமம், கொலை, கள், பொய், களவு என்னும் ஐந்தையும் துறத்தலையே பௌத்தர் ஐவகைச் சீலம் என்பர். இவை முறையே பிறனில் விழையாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, வாய்மை கள்ளாமை என்னும் அதிகாரங்களுடன் ஒத்திருப்பதைக்காணலாம். இன்னும்,

பிறந்தோருறுவது பெருகிய துன்பம்
பிறவாருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக [மணி. 2. 64-67]

என்ற பௌத்தர் தம் நால் வகை வாய்மைகளுடன்,

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா அப்பிறப்பீனும் வித்து (561)
அவாவில்லார்க்கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் (368)
இன்பம் இடையறாதீண்டும் அவா வென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்

என்ற குறள்களின் கருத்துடன் ஒத்திருப்பதைக் காணலாம்.

ஆயினும் கடவுள் வாழ்த்தில் வரும் செய்யுட்களைத்தும் புத்தர் அல்லது இடபதேவர் போன்ற ஒரு சமயத்தலைவர்க்குப் பொருந்துமா என்பது சிந்திக்கத்தக்கது. 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் தொடர் உலகுக்கு மூல காரணமாகவுள்ள ஒரு கடவுளைக் குறிப்பதன்றிச் சமுதாயத்தில் மக்களுக்குப் பல தொழில்களைக் கற்பித்துச் சமுதாய ஒழுங்கை நிலை நாட்டிய தலைவரொருவரை அல்லது அறத்தை உலகுக்குக் கற்பித்த ஒருவரைக் குறிக்குமெனப் பொருள் கொள்வது சிறப்பாகுமா? மேலும் புத்தர், இடபதேவர், மகாவீரர் ஆகியோர் நம்மைப் போன்ற உயிர்கள்தாமே.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (7)
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார் (10)

என அவர்களைக் குறித்துக் கூறுவதும் பொருந்துமா? அவர்களை வணங்கி அவர்கள் கற்பித்த அறத்தைப் பின்பற்றுவோர் வீட்டையடைவர் எனலாம். அவ்வாறு செய்யாதார் கவலை மாற்றார், பிறவிப் பெருங்கடல் நீந்தார் என்று [illegible]ராமா? அவர்கள் யாருடைய அடியடையும் சாராமல் தம்
[illegible]

~~அல்லவா? வள்ளுவர் பிற சமயத்தைச் சேர்ந்தவர் எனக் கூறுவோர் இம்மாறுபாடு களைச் சுட்டிக் காட்டுகின்றனர்~~ !

இனி வள்ளுவர்,

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)

எனக் கூறியபோதும் சமண சமயத்துறவியரை உளத்திற் கொண்டு எழுதியிருத்தல் இயலாது. ஏனெனில் சமண சமயத் துறவியர் நீராடார் எனவே பல நூல்களி லின்றும் அறிகிறோம். 'புறந்தூய்மை நீரானமையும்' (298) என்ற வள்ளுவர் கூற்றும் நீராடாமலிருப்பதே சிறப்பு, அதுவே அறமாகும் என்ற சமணர்தம் கொள்கையுடன் பொருந்தாதே. சமணர் தேனுண்டலைத் தவறுகக் கருதுவர். அதை நல்லுணவாகக் கருதார். வள்ளுவர் 'பாலொடு தேன் கலந்தற்றே' எனத் தேனையும் பாலையும் இனியவற்றிற்குவமையாகக் கூறுவதும் இக்கருத்துடன் மாறுபடுவதே. பொதுவாகக் காமத்துப்பாலே துறவையே விரும்பும் சமண சமயத்தோர் மனப்பான்மையுடன் பொருந்துவதோ என்பதும் சிந்திப்பதற்குரியதே,

4. <u>சுவைட்சர் கருத்து</u>: அறக்கருத்துக்களைமட்டும் நோக்கும் போதும் வள்ளுவரின் அறம் முழுவதும் பௌத்த சமண அறங்களைத் தழுவி யெழுந்ததல்ல என்றும்சில அறிஞர் கூறுவர். டாக்டர் ஆல்பேர்ட் சுவைட்சர் (Dr. Albert Schweitzer) 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' (Indian Thought and Its Development) என்ற தம் நூலில் வள்ளுவர் பௌத்த சமண அறக்கருத்துக் களில் சிறந்தனவற்றையெடுத்துக் கொண்டார் எனினும் அவர்தம் அடிப்படைக்கும் அச்சமயங்களின் அடிப்படைக்கும் வேறுபாடு உண்டு என்பதை விளக்கினுர். அச் சமயங்களின் அறம் உலகையும் வாழ்க்கையையும் மறுத்தல் (World and life negation) என்றும் அடிப்படையிலிருந்து தோன்ற வள்ளுவரின் அறமோ பெரும் பாலும் உலகையும் வாழ்க்கையையும் ஏற்றல் (world and life affirmation) என்ற அடிப்படையைக் கொண்டது என்றுர் அவர். பௌத்தர்களின் துறவை யொழுக்கம் முதலியன எதிர் மறையறங்களாக வல்லவா உள்ளன? அத்தகைய அறங்களையும் கூறினுர் என்னும் வள்ளுவர் அன்புடைமை, இனியவை கூறல், செய் நன்றியறிதல், கண்ணேட்டம், நட்பு முதலிய பல உடன்பாட்டு அறங்களையும் கூறினுர் அல்லவா? இத்தகைய அறங்களைக் கூறும் அதிகாரங்களிலின்றும் பல கூறு குறள்களை எடுத்துக் காட்டி வள்ளுவர் இக்கருத்துக்களைப் பௌத்த சமண நூல்களினின்றும் பெற்றுக் கொள்ளவில்லை யென்றும் பொதுமக்களிடையே வழங்கிய அறக்கருத்துக்களில் சிறந்தவற்றைத்திரட்டி அவற்றையும் வள்ளுவர் தம் நூலில் சேர்த்துக் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் இவ்வறிஞர் கூறினுர்.[1]

5. <u>குறளும் கீதையும்</u>: குறளுக்கும் வைதிக சமயத்திற்கும் உள்ள தொடர்பை இனி ஆராயலாம். கெம்பையா ஆறுமுகம் என்னும் ஓர் அறிஞர் திருக்குறளையும் கீதையை யும் ஒப்பிட்டு ஒருநூல் எழுதியுள்ளார். இருநூல்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை சிலவற்றை யெடுத்துக் காட்டுகின்றுரேயன்றி இவ்வாசிரியர் வள்ளுவரின் சமயம் அத்- வைதவேதாந்தமே எனக் காட்ட முயலவில்லை. மக்கள் இறைவனை வழிபடுதல் வேண்டும், கடமையைச் செய்தல் வேண்டும், ஐம் பொறிகளை அடக்குதல் வேண்டும், உள்ளத்தைச் சென்ற விடத்திற் செலவிடாது கட்டுப்படுத்தி அச்சத்தை நீக்கி நேர்மை யைக் கடைப்பிடித்தல் வேண்டும். சினம், அழுக்காறு, கர்வம், சோம்பல் முதலியவை வேண்டாத குணங்களாகும்; இவை தீமையையே பயக்கும்; ஈகைநன்று, கைமாறு கருதா ஈகை மிகச் சிறந்ததே; இல்லறம் துறவறம் என்னும் இரண்டும் நன்முறையில் கடைப்பிடிக்கப்படின் நன்றேயாகும், ஆயினும் துறவு சிலர்க்கேயேற் றது, யாவர்க்குமேற்றதன்று என்னும் சில அறக்கருத்துக்களிலேயே இரு நூல் கட்கும் ஒற்றுமை காட்டப்படுகிறது. இத்தகைய கருத்துக்களில் கீதைக்கும் குறளுக்கும் சில ஒத்த கருத்துக்கள் உள்ளன என்பது உண்மையே.

"ஆமையானது தன் அவயவங்களை ஓட்டிற்குள் அடக்கிக் கொள்வது போன்று பொறிகளைப் பொருள்களிடமிருந்து முழுதும் உள்ளிழுக்க வல்லவனுக்கு நிறைஞானம் ஏற்படும்" (கீதை 2,58)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (126)

ஆ) <u>6. சைவம் பற்றி:</u> வள்ளுவரைச் சைவர் எனக்கருதுவோர் பலர் அவ்வாறு கருதியே சைவ சித்தாந்த நூல்களை எழுதியோர், சிறப்பாகத் திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் குறளை அடிக்கடி தம் நூல்களில் எடுத்தாண்டனர். தற்காலத்திலும் இக்கருத்தை ஆதரிப்போர் பலர். காஞ்சிபுரம் தருமையாதீனத் தமிழ்ப் ~~அவ~~ புலவர் ஸ்ரீவச்சிரவேல் முதலியார் 'திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே' என்னும் தலைப்பில் ஒருநூல் எழுதியுள்ளார். வள்ளுவர் பாடிய கடவுள் வாழ்த்து முழுவதும் சைவ சித்தாந்தக் கடவுட் கொள்கையுடனேயே பொருந்தும் என விளக்க இவ்வாசிரியர் முயல்கிறார். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது உலகைப் படைத்த கடவுளையே குறிக்கும் எனவும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடர் சிவபிரானின் தவக்கோலத்தைக் குறிக்குமெனவும் 'எண்குணத்தான்' என்னும் தொடர், தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்னும் சைவநூல்களுள் கூறப்பட்ட எண்குணங்களையே குறிக்குமன்றி அனந்த ஞானம் முதலிய சமண சமயத்து எண்குணங் ~~களையே குறிக்குமன்றி~~ அவைகளில் சில வெறும் இன்மைகளாகவே (நாமமின்மை முதலியன) இருப்பதால் அவை குணங்களாகா எனவே அறவாழி என்னும் தொடர் சக்கரத்தைக் குறிக்காது அறக்கடலையே குறிக்குமெனவும் இவர் கொண்டார். சைவர்கள் அறத்தை இறைவனின் அருளாணையாகக் கருதுவர் ஆதலின் கடவுளை அறவாழியந்தணன் என்பது பொருத்தமேயென்றார். 'வகுத்தான்' 'உலகியற்றியான்' எனக் குறளில் பிற இடங்களில் வரும் பெயர்களும் சித்தாந்தக் கொள்கையொடு பொருந்துவனவே; பௌத்த சமண சமயங்களின்படி உலகைப் படைத்தவன் ஒருவனில்லை, மேலும் வினைதானே பயன் விளைவிக்குமன்றி வினையின் பயனை வருப்பவன் ஒருவன் இல்லை என இவ்வாசிரியர் தம் நூலில் கூறினர்.

திருக்குறளில் காணப்படும் உயிர்களைப் பற்றிய கொள்கையும் சித்தாந்தக் கொள்கையுடனேயே பொருந்துவதாம். ஆன்மா ஏதாவதொன்றைச் சார்ந்து நிற்பதன்றித் தனித்து நிற்காது; சகல நிலையில் பாசத்தைச் சார்ந்து நிற்கும் ஆன்மா வீட்டு நிலையில் இறையாகிய பதியைச் சாரும் என்னும் சித்தாந்தக் கொள்கையுடன்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (350)
சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் (359)

என்ற குறள்கள் பொருந்துவதையும் அவர் விளக்கினர்.

சைவ சித்தாந்தக் கொள்கைகட்கும் வள்ளுவரின் கருத்துக்கட்கும் ஒற்றுமைகளும் உளவெனினும் வேற்றுமைகளும் உள. அவற்றை ஆசிரியர் எடுத்துக் காட்டவில்லை. சித்தாந்த நூல்கள்-சங்

யுடையவரும் அறம் அல்லது மாறு நியதி உடையவருமாவர். வள்ளுவரின் இக் கடவுட் கொள்கை 'யாவும் பிரமமே' என்றும் அத்துவைதக் கொள்கையினின்று வேறுபட்டதெனவும் வள்ளுவர் கூறியது பழந்தமிழர் சமயமே எனவும் சோம சுந்தர பாரதியார் கூறினர்.

9. கிருத்தவம்பற்றி

வள்ளுவர் கிருஸ்தவரே எனத் தற்காலத்தில் சிலர் கூறிவரும் கருத்தையும் இங்கு ஆய்தல் பொருந்தும். கிருஸ்துவின் சீடராகிய தூயர் தோமஸ் தமிழ் நாட்டிற்கு வந்தார் எனவும் சிலகாலம் சேர நாட்டிலும் பின்பு மயிலையிலும் வாழ்ந்து பணியாற்றிக் கிருஸ்துவின் போதனைகளை அவ்வவ்விடங்களில் பரவச் செய்தார் என்றும் செவிவழிச் செய்தி யொன்று உண்டு. இதை உண்மையெனக் கொள்வோர் சிலர் கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளுவர் கிருஸ்துவின் போதனைகளை அறிந்திருத்தல் கூடும் என்றும் அவரே கிருஸ் தவர் ஆகியிருத்தல் கூடும் என்றும் கூறுவர்.

வள்ளுவர் கிருஸ்துவின் போதனைகளை அறிந்திருத்தல்கூடும் என்ற கருத்தை ஜி.யு.போப் முதற்கண் கூறினர்.[3] தீமை செய்தோர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும் என்பன போன்ற நல்லறக் கருத்துக்களில் இருவர் கூற்றுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையே எனப் போப்பை அவ்வாறு எண்ணச் செய்தது. ஆயினும் போப் வள்ளுவர்தாமே கிருஸ்தவர் எனக் கூறவில்லை.

தற்காலத்தில் மு.தெய்வநாயகம் என்ற கிருஸ்தவத்தமிழறிஞர் வள்ளுவர் கிருஸ்தவரே என்ற தம் கருத்தைச் சில நூல்கள் மூலம் விளக்கியுள்ளார். கடவுள் பிதா, குமாரன் (கிருஸ்து) பரிசுத்த ஆவி என மூவடிவத்தில் செயலாற்று கிறார் என்பதே கிருஸ்தவக் கொள்கை. அதற்கேற்பத் திருக்குறள் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து பிதாவையும், வான்சிறப்பு பரிசுத்த ஆவியையும் நீத்தார் பெருமை குமாரனாகிய கிருஸ்துவையும் குறிக்கும் என மு.தெய்வநாயகம் விளக்கி யுள்ளார். இக்கருத்துப்படி வான், புயல், மழை போன்ற சொற்கள் உருவகமாகப் பரிசுத்த ஆவியைக் குறித்தனவேயன்றி இயன்மழை அங்குக் குறிக்கப் படவேயில்லை. நீத்தார் என்பதும் மற்றும் அவ்வதிகாரத்தில் வரும் பன்மைச் சொற்களும் மரியாதைப் பன்மையே. அவை கிருஸ்து ஒருவரையே குறிப்பன.

மு. தெய்வநாயகமும் அவரைச் சார்ந்தோரும் பல குறள்கட்குக் கொள்ளும் பொருள் ஏனைய உரையாசிரியர் பலரும் கொள்ளும் பொருளுக்கு மாறுபட்ட தாகவேயுள்ளது.

உயிர்கள் ஒரு உடலினின்றும் பிரிந்து சென்றபின் மற்றொரு வடிவத்தில் உலகில் பிறக்கின்றன என்றும் மறு பிறப்புக்கொள்கையும் வினைத் தொடர்பு பற்றிய கொள்கையும் வைதிக பௌத்த சமணசமயங்கட்கு உடன்பாடாயினும் கிருஸ்த சமயத்துக்கு உடன்பாடன்று. ஆகவே பிறப்பு, வினை முதலிய சொற்கள் குறளில் வரும் இடங்கட்கு மு. தெய்வநாயகம் வேறு பொருள் கொள்வர். பிறப்பு வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளையாவது மனமாற்றத்தையாவது குறிக்கும் என்பர். 'எழுமையும்' என்றும் சொல் எழுபிறப்பைக் குறிக்காது வாழ்க்கையின் பல நிலைகளிலும் என்ற பொருளைத் தரும் என்பர்.

பண்டைத் தமிழ் நாட்டில் தூய தோமாஸின் தொடர்பினால் கிருஸ்துவின் போதனைகளை ஏற்றுக் கொண்டு கிருஸ்துவின் ஆற்றலுக்குச் சான்றாக விளங்கிய பழந்தமிழ்க் கிருஸ்துவர்கள் பலர் இருந்தனராம். அவர்களே சான்றோர் என அழைக்கப்பட்டனராம். தோமாஸ் வாழ்ந்து பணியாற்றிய மயிலை தொண்டை நாட்டிலல்லவா இருக்கிறது. அதனாலேயே தொண்டை நாடு சான்றோருடைத்து எனப்போற்றப்பட்டதாம். இவ்வாறெல்லாம் மு. தெய்வநாயகம் கூறினார்.

குறிப்புகள்

1. Schweitzer, Albert., Indian Thought and Its Development P 200 - 205

2. Pillai, R.K., A Social History of the Tamils, Part I, P 518 foot note, "....... while stanzas 8, 134 and 1103 indicate his (Valluvor's) belief in Hindnism, particularly in Vaishnavism"

3. Kamaliah, K.C., Preface in the Kural, P 4

பல்வேறு சமயத்தவர் கூறும் கருத்துக்கள் பற்றி ஆய்வு

வள்ளுவர் பௌத்தர் அல்லது சமணர் என்போர் கூற்றுக்களை எண்ணுங்கால், கடவுள் வாழ்த்தில் வரும் செய்யுட்களெல்லாம் புத்தர் அல்லது இடபதேவர் போன்ற ஒரு சமயத் தலைவர்க்குப் பொருந்துமா என்பது சிந்திக்கத்தக்கது. 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் தொடர் உலகுக்கு மூலகாரணமாகவுள்ள ஒரு கடவுளைக் குறிப்பதன்றிச் சமுதாயத்தில் மக்களுக்குப் பல தொழில்களைக் கற்பித்துச் சமுதாய ஒழுங்கை நிலை நாட்டிய தலைவரொருவரை அல்லது அறத்தை உலகுக்குக் கற்பித்த ஒருவரைக்குறிக்குமெனப் பொருள் கொள்வது சிறப்பாகுமோ? மேலும் புத்தர், இடபதேவர், மகாவீரர் ஆகியோர் நம்மைப் போன்ற உயிர்கள் தாமே.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (7)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார் (10)

என் அவர்களைக் குறித்துக் கூறுவதும் பொருந்துமா? அவர்களை வணங்கி அவர்கள் கற்பித்த அறத்தைப் பின்பற்றுவோர் வீட்டையடைவர் எனலாம். அவ்வாறு செய்யாதார் கவலை மாற்றார், பிறவிப் பெருங்கடல் நீந்தார் என்று அறுதியிட்டுக் கூறலாமா? அவர்கள் யாருடைய அடியையும் சாராமல் தம் முயற்சியினால் மெய்யுணர்வு பெற்றதைப் போலப் பிறவுயிர்களும் பெறக் கூடும் அல்லவா? வள்ளுவர் பிற சமயத்தைச் சேர்ந்தவர் எனக் கூறுவோர் இம்மாறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இனி வள்ளுவர்,

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)

எனக் கூறியபோதும் சமண சமயத்துறவியரை உளத்திற் கொண்டு எழுதியிருத்தல் இயலாது. ஏனெனில் சமண சமயத் துறவியர் நீராடார் எனவே பல நூல்களினின்றும் அறிகிறோம். 'புறந் தூய்மை நீரானமையும்' (298) என்று வள்ளுவர் கூறும் நீராடாமலிருப்பதே சிறப்பு, அதுவே அறமாகும் என்ற சமணர்தம் கொள்கைகளுடன் பொருந்தாததே. சமணர் தேனுண்டலைத் தவறாகக் கொள்ள கருதுவர். அதை நல்லுணவாகக் கருதார். வள்ளுவர் 'பாலொடு தேன் கலந்தற்றே' எனத் தேனையும் பாலையும் இனியவற்றிற்குவமையாகக் கூறுவதும் இக்கருத்துடன் மாறுபடுவதே. பொதுவாகக் காமத்துப் பாலே துறவையே விரும்பும் சமண சமயத்தோர் மனப்பான்மையுடன் பொருந்துவதா என்பதும் சிந்திப்பதற்குரியதே.

கீதையையும் குறளையும் ஒப்பிடுங்காலும் அறவியற் கருத்துக்களில் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றனவேயன்றி தத்துவக் கொள்கைகளில் கீதையின் அடிப்படைக்கும் குறளின் அடிப்படைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டு. கீதை கடவுள் எல்லாவற்றிலும் கலந்திருக்கிறார், கடவுளே யாவுமானார் என்ற அத்துவைதக் கருத்தை ஏற்றுக் கொள்வதே. குறளில் அக்கருத்து இல்லை. மாயை என்னும் ஆற்றலால் யாவும் உண்டாகின்றன, இயங்குகின்றன எனக் கீதையுள் அடிக்கடி கூறப்படுகிறது. மாயையைப்பற்றிய கருத்து குறளில் இல்லை. இவ்வேற்றுமைகளைக் குறித்துக் கெம்பு ஆசிரியரும் தம் நூலில் யாதும் கூறவில்லை.

அறக்கருத்துக்களைக் கூறும்போதும் பல அறங்களை தாமசம், இராஜசம், சாத்விகம் என்னும் அடிப்படையில் கூறுவது கீதையில் உள்ள வழக்காகக்

காணப்படுகின்றது. 'ஞானமும் கீதையும்' என்ற நூலில் வரும் எடுத்துக் காட்டு களில் இதைக் காணலாம். எடுத்துக் காட்டாகத் தக்க இடத்தில் காலத்தில் கைம்மாறு கருதாமல் செய்யப்படுவது சாத்விக தானமென்றும் கைம்மாறு கருதிச் செய்யப்படுவது இராஜச தானமென்றும் வேண்டாத இடத்திலும் காலத்திலும் தகுதி யில்லாதவர்களுக்கு வணக்கமின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படுவது தாமச தான மென்றும் கீதை கூறுகிறது. அவ்வாறே தவத்தையும் முக்குணங்களின் அடிப்படையில் விளக்குகிறது கீதை. இம்முக்குணங்களைப்பற்றிய கருத்தோ அவ்வடிப்படையில் அறங்களை வகுக்கும் வழக்கோ குறளில் இல்லை.

சைவ சித்தாந்தக் கொள்கைகட்கும் வள்ளுவரின் கருத்துக்கட்கும் ஒற்றுமைக ளும் உளவெனினும் வேற்றுமைகளும் உள. அவற்றை ஆசிரியர் எடுத்துக் காட்ட வில்லை. சித்தாந்த நூல்கள் சங்கரரின் கேவலாத்துவைதம் அல்லது ஏகாத்ம வாதம் என்றும் கொள்கையை மறுத்தன எனினும் அவையும் ஒருவகை அத்துவைதத் தைப் பின்பற்றுவனவே.

பண்ணையும் ஓசையும் போலப் பழ மதுவும்
எண்ணும் சுவையும் போல் எங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்றென்று
அத்துவிதம் என்றறையும் ஆங்கு (8)

என்பது சிவஞான போத வெண்பாக்களுள் ஒன்று. கடவுள் உயிர்களுடனும் உலகத்துடனும் கலந்து நிற்கிறார் என்ற கருத்து (அத்துவிதம்) குறளில் இல்லை. சித்தாந்த ஆசிரியர்களும் மாயையை ஏற்றுக் கொள்கின்றனர். மாயை பற்றிய கருத்தும் குறளில் இல்லை. சித்தாந்தக் கொள்கையின்படி ஆன்மா வீட்டு நிலையில் இறைவனிடமிருந்தே பேரின்பத்தைப் பெறுகிறது. வள்ளுவர் இதையும் தெளிவாகக் கூறவில்லை.

சைவ சித்தாந்தத்துக்கும் திருக்குறளுக்குமிடையே பல ஒற்றுமைகளிருப்பினும் வள்ளுவர் தம் காலத்தின்பின்னெழுந்த சித்தாந்தக் கொள்கைகளைத் தழுவி யெழுதியிருத்தல் கூடுமா? சித்தாந்த ஆசிரியர்கள் திருக்குறளைத் தழுவி எழுதினார்கள் என்பதே பொருந்தும். வள்ளுவர் காலத்தில் சைவ சமயம் என ஒன்று நிலவியதாயின், மணி மேகலையில் 'சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை'யுள் கூறப்படும் சைவ சமயமே அக்காலத்திருந்திருத்தல் வேண்டும். அங்கு சைவவாதி இரு சுடரோடியமானனைம் பூதமென எட்டு வடிவங்களைக் கூறினானன்றி எண் குணங்களைக் கூறவில்லை. 'கலையுருவினோன் படைத்த விளை யாடும் பண்பினோன், தன்னில் வேறுதானொன்றி லோன்' என அங்குக் கூறப்படும் இறையியற் கொள்கைகளும் குறளில் இல்லை.

வள்ளுவர் சிவபிரானை எங்கும் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை.

வள்ளுவர் சமயம் தமிழர் சமயம் என்போர் கூற்றை நோக்கில் தமிழர் சமயம் என ஒரு சமயம் வள்ளுவர் காலத்தில் இருந்ததா என்பது ஐயமே. தொல் காப்பியர் காலத்திலேயே தமிழ் நாகரிகமும் ஆரிய நாகரிகமும் இருவர்தம் சமயமும் இணைந்ததாக அல்லவா தோன்றுகிறது?

மு. தெய்வநாயகம் முதலியார் கருத்துக்களை ஆயுங்கால், வள்ளுவர் கிறிஸ்தவராயின் தம் நூலில் கிறிஸ்து, பரிசுத்த ஆவி அல்லது இறைவனின் தூய ஆவி என இறை பெயர்களை வெளிப்படையாகக் கூறாது 'வான்' எனவும் 'நீத்தார்' எனவும் ஏன் மறைமுகமாகக் கூறினார் என்பது புலனாகவில்லை. பிறப்பு, எழு பிறப்பு, எழுமை, வினை முதலிய சொற்களைப் பொதுவாகச் சங்க காலத்திலும் சங்கமருவிய காலத்திலும் தமிழ் நாட்டில் கவிஞரும் அறிஞரும் பிறரும் எப்பொருளில் வழங்கினார்களோ அப்பொருளிலேயே வள்ளுவரும் வழங்கியிருப்பாரேயன்றி அவர் மட்டும் வேறு பொருளில் வழங்கி யிருக்க முடியுமா? மு. தெய்வநாயகத்தின் நூல்களைப் படிக்கும்போது அவர் திருக்குறளைச் சரியாகப் புரிந்து கொண்டாரா என்பதுடன் கிறிஸ்தவ சமய வரலாற்றையும் எவ்வளவு தூரம் கற்றறிந்தார் என்ற ஐயமே ஏற்படுகிறது. கிறிஸ்தவ சமய வரலாற்றையுணர்ந்தோர் கிறிஸ்தவ சமயத்தில் துறவியக்கம் தோன்றியது பிற்காலத்திலேயே, கி.பி. 3 ஆம் அல்லது 4 ஆம் நூற்றாண்டளவிலேயே என்பர். 3ஆம் நூற்றாண்டில் தனிப்பட்ட கிறிஸ்தவர் சிலர் துறவு பூண்டனரெனவும் 4 ஆம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவத்துறவியர் சேர்ந்து நிலையங்களையும் மடங்களையும் அமைக்கத் தொடங்கினர் என பிரித்தானிய கலைக் களஞ்சியமும் கூறுகிறது. வள்ளுவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவராயின் தம் சமயத்தில் இல்லாத துறவறத்தைக் குறித்து ஓர் இயல் எழுதி யிருப்பாரா?

ஆகவே மு. தெய்வநாயகத்தின் நூல்கள் பல புதிர்களை எழுப்புகின்றனவே யன்றி எதையும் தெளிவாக்க வில்லை.

முடிவுரை :-

முன்பு காட்டப்பட்ட பல அறிஞர்தம் கூற்றுள் டாக்டர் அல்பேர்ட் சுவைட்ச ரின் கூற்றும் டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் கூற்றுமே ஓரளவு உண்மையுடையன எனத் தோன்றும். வள்ளுவர் காலத்தில் தமிழர் சமயம் எனத்தனியே ஒரு சமயம் இருந்த தென்பது பொருந்தாது. வள்ளுவர் தற்போது இந்து சமயம் என அழைக்கப்படும் சமயத்தைச் சேர்ந்தவராகவே யிருத்தல் கூடும். இந்து சமயத்தில் பிறந்த அவர் பரந்த மனப்பான்மை உடையவராயிருந்ததால் தம் காலத்தில் தமிழ் நாட்டில் பரவிய பௌத்த சமண சமயங்களில் காணப்பட்ட பல அறக் கருத்துக்களைத் தழுவியிருத்தல் கூடும். பொது மக்களிடையே காணப் பட்ட அறக்கருத்துக்களில் சிறந்தவற்றையும் திரட்டிக் கொண்டார். சைவம், வைணவம் என்னும் பிரிவுகள் தெளிவாக வகுக்கப்படாத காலம் அது. ஆகவே வள்ளுவர் சைவர் அல்லது வைணவர் எனப் பொருந்தாது. வள்ளுவர் வைதிக சமயத்தையோ ஆரியரையோ எதிர்த்தார் எனல் பொருந்தாது. ஆனால் அவர்தம் நூலை வேதம் உபநிடதம் முதலிய ஆரிய நூல்களைப் பெரிதும் தழுவி எழுதியதாகத் தோன்றவில்லை. அவ்வாறாயின் உபநிடதங்களில் காணப்படும் அத்துவைதக் கொள்கை குறளிலும் காணப்படவேண்டும். அதன் சாயலே குறளில் இல்லை. இந்து சமயத்தில் ஆரியர்களின் கருத்துக்களும் இருந்தன. தமிழரின் கருத்துக்களும் இருந்தன. வள்ளுவர் பழந்தமிழ்த் துறவியருடனும் அறிஞர்களுடனும் பழகி அவர்கள் கருத்தைப் பெரிதும் தழுவியெழுதினார், முக்கியமாகத் தம் கடவுட் கொள்கையை அவர்களி டமிருந்து பெற்றார் எனக் கொள்ளல் பொருந்தும். தமிழ் நாட்டில் வள்ளுவர் காலத்தில் பொதுமக்களிடையே நிலவியது பல தெய்வ வணக்கமே. பழந்தமிழ்த் துறவியரிடத்தே அத்துவைதச் சார்பற்ற ஒரு கடவுட் கொள்கை நிலவியிருத்தல் கூடும். இன்னும் வள்ளுவர் தாமே கிறிஸ்தவர் என்பது பொருந்தா தெனினும் பண்டைக் கிறிஸ்தவருடனோ அன்றி யூதருடனோ அவருக்குத் தொடர்பிருந்திருக்கலாம்.

அத்தொடர்பும் அவரது அறிவியில் சார்ந்த ஒரு கடவுட் கொள்கையை உருவாக்கியிருக்கலாம்.

தொகுப்பும் ஆய்வும்
காமாட்சி ஸ்ரீனிவாசன்,
விரிவுரையாளர்,
திருக்குறள் ஆய்வகம்.

உலகிலுள்ள மக்கள் அனைவருமே பிறவாப் பெருநிலைக்கு உரியர் என்பதுதோன்றும். திருவள்ளுவர், மக்கள் அனைவருமே பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குரியர்; ஆனால், அவருள் இறைவன்அடிசேராதார் பிறவிப் பெருங் கடலை நீந்தார், அடி சேரும் செவ்வி எய்துங்காறும் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உழல்வர் என்று அறிவிக்கின்றார். இறைவன் என ஆண்பாலால் கூறினமையால், அவன் சார்பை அடியென்றும் தாள் என்றும் வள்ளுவர் ~~[illegible]~~ வற்புறுத்துகின்றார். இத்தனையும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் வினையுணர்வும் மறு பிறப்பும் செம்பொருள் உண்டென்னும் கொள்கையும், வினை நீக்கத்தால் பிறவாப்பேறு பெறுவதே செயற்பாலது என்பதும், அதற்கு அச் செம்பொருள் செய்துள்ள நன்றியை நினைந்து வழிபடுவதும் பிறவும் வள்ளுவர் காட்டுஞ் சமயக் கருத்தாவன காணலாம்.

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார் – நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி.

– கல்லாடர்

Syntax
ed. Platts A.H. Seaton
Oxford Readings in Philosophy (Rout.)
1974